திருமணப் பாட்டு

கா. அரு. கா.
ஆத்தன்குடி

தொகுப்பும் உரையும்
ராய. சொ.

திருமணப் பாட்டு

ஆத்தன்குடி
கா. அரு. கா. காடப்ப செட்டியார் மகன்
செல்வன் அருணசலன்
திருமண மலர்
மன்மத-ஆனி-கஉ. 26-6-55

தொகுப்பும் உரையும்
ராய. சொ.

௨
சிவமயம்

திருமணப் பாட்டு

நூல் முகம்

திருமணப் பாட்டு பழைய இலக்கியங்களின் குப்பு நூல். இரண்டாயிரம் ஆண்டுகட்கு னே தோன்றிய சிலப்பதிகாரம் தொட்டு இருநூற் ம்பது ஆண்டுகட்கு முன் எழுந்த திருவிளையாடல் ௲ உள்ள ஒன்பது இலக்கியங்களிலிருந்து ஞெரு திருமண நிகழ்ச்சிகளை நூற்றொரு பாடல் ல் தொகுக்கப்பெற்றது. இத் திருமணப் பாட்டு . அந்தநாள் முதல் இந்தநாள் வரை நடந்த மண முறைகளை யெல்லாம் ஆங்காங்கு இந் னுள் கண்டுகொள்க.

திருமணப்பாட்டு, என் அருமை நண்பர் கா. கா. காடப்ப செட்டியார் அவர்களின் மகன் வன் அருணசலனுக்கு இன்று நடைபெறும் மண அன்பாக மலர்கின்றது. பெரிதும் காதற் நிரம்பிய இப் பாக்களைப் படித்து இன்புற்று க்கையின் எல்லா நலனையும் படிப்போர் பெற்று "நள் இருளில் நட்டம் பயின்றுடும் நாதன்" ர்வாஞக.

ராய. சொ.

த-ஆனி-கஉ

திருமணப் பாட்டு

உள்ளுறை

திருமணப் பாட்டு

திருமணப் பாட்டு

மங்கல வாழ்த்து

கண்ணகி–கோவலன் திருமணம்

சிலப்பதிகாரம்

திங்களைப் போற்றுதும்;
    திங்களைப் போற்றுதும்;
கொங்கலர்தார்ச் சென்னி
    குளிர்வெண் குடைபோன்று,இவ்
அங்கண் உலகுஅளித்த லான்.
ஞாயிறு போற்றுதும்;
    ஞாயிறு போற்றுதும்;
காவிரி நாடன்
    திகிரிபோல், பொற்கோட்டு

பாட்டு—க. வரி க. திங்கள்: சந்திரன். போற்றுதும்: வணங்குவேம்.

வரி உ. கொங்கு: தாது. அலர்: விரிகின்ற, தார்: மாலை. சென்னி: சோழன்.

வரி ங. அம்: அழகிய. கண்: இடம். அளித்தல்: காத்தல்.

வரி ச. ஞாயிறு: சூரியன்.

வரி ரு. காவிரிநாடன்: சோழன். திகிரி: சக்கரம். பொற்கோடு: தங்கச் சிகரம்.

மேரு வலம்திரித லான்.
மாமழை போற்றுதும்;
மாமழை போற்றுதும்;
நாமநீர் வேலி
உலகிற்கு அவன் அளிபோல்,
மேல்நின்று தான்சுரத்த லான்.
பூம்புகார் போற்றுதும்;
பூம்புகார் போற்றுதும்;
விங்குநீர் வேலி
உலகுக்கு அவன்குலத்தோடு,
ஓங்கிப் பரந்தொழுக லான்.
ஆங்கு,
பொதியில் ஆயினும்
இமயம் ஆயினும்
பதிஎழு அறியாப்
பழங்குடி, கெழீஇய

வரி அ. நாமநீர்: பயத்தைத்தரும் கடல். அவன் அருள்: அந்தச் சோழனின் கருணை.
வரி கo. பூம்புகார்: அழகான காவிரிப்பூம்பட்டினம்.
வரி கக. விங்குநீர்: நிறைந்த நீரைக்கொண்ட கடல்.
வரி கச. பொதியில்: பொதிகைமலை.
வரி கரு. பதிஎழு அறியா: ஊரைவிட்டு வேற்றூர் குடி புகத் தெரியாத.

பொது அறு சிறப்பின்
புகாரே ஆயினும்
நடுக்குஇன்றி நிலேஇய
என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார்
உயர்ந்தோர் உண்மையின்;
முடித்த கேள்வி
முழுதுஉணர்ந் தோரே.
அதனால்,
நாகநீள் நகரொடு
நாகநாடு அதனொடு
போகம்நீள் புகழ்மன்னும்
புகார்நகர் அதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை
மாநாய்கன் குலக்கொம்பர்

வரி கசு. பொது அறு சிறப்பு: ஈடில்லாத பெருமை.

வரி கஎ. நடுக்கு இன்றி நிலேஇய: ஆட்டம் காணமல் நிலேத்திருக்கின்றன.

வரி கஅ. ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்: சிறந்தவர்கள் இருக்கின்ற காரணத்தால் முடிவு உண்டு எனச் சொல்ல மாட்டார்.

வரி உக. நாகநீள்நகர்: நெடிய வான் உலகம். நாக நாடு: நாகஉலகம்.

வரி உரு. மாக வான்: விண்ணின் மழை. வண்கை: வழங்கும் கை. மாநாய்கன்: கண்ணகியின் தந்தை. குலக்கொம்பர்: கண்ணகி.

திருமணப் பாட்டு

ஈகைவான் கொடியன்னாள்
    ஈராறு ஆண்டு அகவையாள்;
அவளுந்தான்,
போதில்ஆர் திருவினாள்
    புகழுடை வடிவுஎன்றும்
தீதுஇலா வடமீனின்
    திறம்இவள் திறம்என்றும்
மாதரார் தொழுதுஏத்த
    வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும்
    கண்ணகிஎன் பாள்மன்னோ;
ஆங்கு,
பெருநிலம் முழுது ஆளும்
    பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோடு
    உயர்ந்துஓங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்குஆர்த்தும்
    மாசாத்து வான்என்பான்
இருநிதிக் கிழவன்மகன்
    ஈரெட்டாண்டு அகவையான்;
அவனுந்தான்,

வரி உச. ஈகை: தங்கம். அகவை: உட்பட்ட வயது.
வரி உசா. போதில் ஆர் திருவினாள்: இலக்குமி.
வரி உஎ. வடமீன்: அருந்ததி. திறம்: கற்பு.
வரி ௩௩. ஆர்த்தும்: நிரப்பும். மாசாத்துவான்: கோவலன் தந்தை.

மண்தேய்த்த புகழினான்
மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார்
ஆயத்துப் பாராட்டிக்
கண்டுஏத்தும் செவ்வேள்என்று
இசைபோக்கிக் காதலால்
கொண்டுஏத்தும் கிழமையான்
கோவலன்என் பான்மன்னோ;

அவரை,
இருபெரும் குரவரும்
ஒருபெரு நாளால்
மண அணி காண
மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி,

வரி ௩௬. மண்தேய்த்த புகழ்: பூமி சிறுகப் பெருகிய இசை.

வரி ௩௭. பண்தேய்த்த மொழி: இசையை வென்ற சொல். ஆயம்: கூட்டம்.

வரி ௩௯. கிழமை: உரிமை.

வரி ௪௦. அவரை: இத்துணை சிறப்பித்துக் கூறப்பெற்ற கண்ணகி கோவலன் என்ற இருவரை.

வரி ௪௧. இருபெருங்குரவர்: இருவருடைய சிறந்த தாய் தந்தையர்

வரி ௪௨. மண அணி: திருமணக் கோலம்.

யானை எருத்தத்து
　　அணிஇழையார் மேல்இரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்.
அவ்வழி,
முரசுஇயம்பின; முருடு அதிர்ந்தன;
　　முறைஎழுந்தன பணிலம்வெண்குடை
அரசுஎழுந்ததொர் படிஎழுந்தன;
　　அகலுள்மங்கல அணிஎழுந்தது;
மாலைதாழ் சென்னி
　　வயிரமணித் தூண்அகத்து

வரி ௪௩. யானை எருத்தத்துமேல்: யானையின்பிடரிமீது. அணிஇழையார் இரீஇ: அலங்காரப் பெண்களை ஏற்றி வைத்து.

வரி ௪௪. மாநகர்க்கு ஈந்தார் மணம்: நகர மக்கட்குத் திருமண நிகழ்ச்சியை அறிவித்தனர். பெண்களை அலங்கரித்து யானைமீது இருத்தித் திருமணச் செய்தி பரப்புவது அந்நாள் மரபு போலும்.

வரி ௪௬. முருடு அதிர்ந்தன: மத்தளங்கள் முழங்கின. பணிலம்: சங்கு.

வரி ௪௭. அகலுள்: ஊரிலே. மங்கல அணி: மங்கல ஆபரணம்.

வரி ௪௮. மாலை தாழ் சென்னி: மாலைகள் தொங்கும் உச்சி.

நீல விதானத்து
நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வான்ஊர் மதியம்
சகடுஅணைய வானத்துச்
சாலி ஒருமீன்
தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான்
மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது
காண்பார்,கண் நோன்புஎன்னே!
விரையினர் மலரினர்
விளங்கும் மேனியர்
உரையினர் பாட்டினர்
ஒசிந்த நோக்கினர்

வரி ௪௯. விதானம்: மேற்கட்டி. நித்திலம்: முத்து.

வரி ௫௦. சகடு: உரோகிணி நட்சத்திரம்.

வரி ௫௧. சாலி: அருந்ததி.

வரி ௫௨. கண் நோன்பு என்னே: கண் செய்த தவம் தான் என்னே.

வரி ௫௪. விரையினர்: மணம்மிக்க பொருள்களைக் கொண்டவர்.

வரி ௫௫. ஒசிந்த நோக்கினர்: ஒதுங்கிய பார்வையினர்

சாந்தினர் புகையினர்
தயங்கு கோதையர்
ஏந்துஇள முலையினர்
இடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர்
விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர்
முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தல்
பொலன்நறும் கொடியன்னார்,

**“ காதலற் பிரியாமல்
கவவுக்கை ஞெகிழாமல்
தீதுஅறுக ” எனஏத்திச்
சின்மலர் கொடுதூவி
அங்கண் உலகின்
அருந்ததி அன்னாளை**

வரி ருசு. சாந்து: சந்தனம். புகை: வாசனைப்புகை. கோதை: மாலை.
வரி ருஎ, சுண்ணம்: மணப்பொடி.
வரி ருஅ. கலம்: அணிகலன். விரிந்த பாலிகை: திறந்த தாழி.
வரி ருகூ. முகிழ்த்த மூரலர்: அரும்பிய புன்சிரிப்பினர்.
வரி சுக. காதலற் பிரியாமல்: காதலனைப் பிரியாது. கவவுக்கை ஞெகிழாமல்: கட்டிய கை தளராமல் .

மங்கல நல்அமளி
ஏற்றினர்; தங்கிய
இப்பால் இமயத்து
இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு
உழையதா எப்பாலும்
செருமிகு சினவேல் செம்பியன்
ஒருதனி ஆழி
உருட்டுவோன் எனவே. க

வரி ௫௪. அமளி: படுக்கை.
வரி ௫௫. வேங்கை: புலி; ஈண்டுச் சோழனது கொடிப் புலி.
வரி ௫௬. உப்பால்: அப்பக்கம். உழையதா: பொருந்துவதாக.
வரி ௫௭. செம்பியன்: சோழன்.
வரி ௫௮. ஆழி: ஆணைச் சக்கரம். உருட்டுவோன்: செலுத்துவோனாக.

விசயை சச்சந்தன் மன்றல்

சீவக சிந்தாமணி

மருமகன் வலந்ததும்
மங்கை ஆக்கமும்
அருமதிச் சூழ்ச்சியின்
அமைச்சர் எண்ணிய
கருமமும் கண்டுஅவர்
கலத்தற் பான்மையில்
பெருமகற் சேர்த்தினர்
பிணைய னாளையே ௨

பொனங்கொடி அமிர்த னாளும்
பொன்னெடுங் குன்ற னானும்

பாட்டு

௨. சச்சந்தன் சொன்னதையும் விசயையின் நன்மையையும் அரிய மதிமந்திரிகள் எண்ணிய காரியத்தையும் அறிந்து அவ் இருவரின் கலப்பை விரும்பி ச்ச்சந்தனோடு விசயையைச் சேர்த்தினர்கள்.
மருமகன்: சீதத்தனின் மருமகனாகிய சச்சந்தன். வலந்தது: சொன்னது. மங்கை சீதத்தன் மகள் விசயை. அமைச்சர்: மந்திரிகள். கருமம்: காரியம். பெருமகன்: சச்சந்தன். பிணையனாள்: பெண்மானின் கண்ணைப்போன்ற விழியைக்கொண்ட விசயை.

௩. பொன் கொடியாகிய அமிர்தத்தை ஒத்த விசயையும் நீண்ட தங்கமலையனைய சச்சந்தனும் காம பாணங்

அனங்கனுக்கு இலக்கம் ஆகி
அம்புகொண்டு அழுத்த விள்ளார்,
இனம்தமக்கு எங்கும் இல்லார்
இயைந்தனர் என்ப; முக்கண்
சினம்திகழ் விடையி னனும்
செல்வியும் சேர்ந்தது ஒத்தே. ௫

தன்அமர் காத லானும்
தையலும் மணந்த போழ்தில்
பொன்அனுள் அமிர்தம் ஆகப்
புகழ்வெய்யோன் பருகி யிட்டான்;
மின்அவிர் பூணி னனை
வேற்கணுர்க்கு இபற்றப் பட்ட

கட்கு இலக்காகி விலகாராகி ஈடற்ற அவர்கள் சிவபெருமானும் அம்பிகையும் கூடியதுபோல அணைந்தனர்.

பொன் அம் கொடி: பொன் போன்ற அழகிய கொடி. பொன் நெடும் குன்றம்: தங்கம் அனைய நீண்ட மலை. அனங்கன்: மன்மதன். விள்ளார்: விலகாராகி. இயைந்தனர்: பொருந்தினர். சினம் திகழ் விடை: கோபங் கொண்ட காளை. செல்வி: உமை– சிவனும் தேவியும் சேர்ந்தமைபோல இயைந்தனர் என முடிக்க.

௬. ஒத்தகாதலுனுடைய சச்சந்தனும் விசயையும் சேர்ந்த போது, அப்பொன்னனுளை அமுதத்தைக் குடிப்பது

மன்னிய மதுவின் வாங்கி
மாதரும் பருகி யிட்டாள். ௪

பவழவாய் பரவை அல்குல்
என்றிவை பருகும் வேலான்,
கவழம்ஆர் களிறு போன்றான்;
காதலி கரும்பை ஒத்தாள்;
தவழ்மதுக் கோதை மாதர்
தாமரைப் பூவ தாக,
உமிழ்நகை வேலி னானும்
ஒண்சிறை மணிவண்டு ஒத்தான். ௫

போலப் பருகினான் புகழ்வெய்யோன். ஒளி வீசும் நகை சுமந்த அவ்வேந்தனைத் தேனை நுகர்வதுபோல அவளும் பருகியிட்டாள்.

மணந்த போழ்தில்: அணைந்த சமயத்தில். புகழ் வெய்யோன்: புகழ்கொண்ட சூரியனை அனையவன்.

௫. விசயை கரும்பாக இனிக்கின்றாள் யானையாகிய சச்சந்தனுக்கு. யானை கரும்பைச் சுவைப்பதுபோலக் காதலியைச் சுவைக்கின்றான் காதலன். உடனே அவள் தாமரைப் பூவாக மாறுகின்றாள்; அவன் வண்டாக விழ்ந்து அப்பூவைக் கலக்கித் தேன் உண்டு திளைக்கின்றான்.

பளிக்குஅறைப் பவழப் பாவை
பரிசுஎனத் திகழும் சாயல்
களிக்கயல் பொருவ போன்று
கடைசிவந்து அகன்ற கண்ணாள்,
ஒளிக்கவின் கொண்ட காமத்து
ஊழுறு கனியை ஒத்தாள்;
அளித்துஅயில் கின்ற வேந்தன்
அம்சிறைப் பறவை ஒத்தான் சா

வார்உலாம் முலையி னுட்கும்
வரிசிலைத் தடக்கை யாற்கும்
சீர்உலாம் கோலம் செய்தார்;
செப்பினர் வதுவை நல்நாள்;

பரவை: கடல். கவழம்: உணவு உருண்டை. களிறு: யானை. தவழ் மது கோதை மாதர்: தேன் சொட்டும் மாலையணிந்த விசயை.

சா. இங்கு அக்காதலி பக்குவமான கனியாக அமைகின்றாள். காதலனாகிய சச்சந்தன் பறவையாகி, "வசையிலாள், வரத்தின் வந்தாள், வான்சுவை அமிழ்தம் அன்னாள்" ஆகிய விசயை என்னும் கனியை மூக்கினால் கொத்தித் தின்று களிக்கின்றான்.

கயல்: மீன். பொருவ போன்று: போர் செய்வதுபோல. கவின்: அழகு. ஊழ் உறு கனி: விதியால் கிடைத்த பழம். அயில்கின்ற: உண்ணுகின்ற.

பார்எலாம் அறிய நின்று
படாமுரசு ஆர்ப்பத் திவேட்டு
ஏர்உலாம் கோதை இன்பத்து
இளநலம் பருகு கின்ருன். எ

ஒள்மணிக் குழைவில் வீச,
ஒளிர்ந்துபொன் ஓலை மின்ன,
வண்ணமே கலைகள் ஆர்ப்ப,
வான்சிலம்பு ஒலிப்ப, முத்தும்
கண்ணியும் பசும்பொன் நாணும்
கதிர்முலை புடைப்பக் காமர்
அண்ணல்அம் குமரன் தன்னேடு
ஆயிழை ஆடி ஞளே. அ

எ. கச்சணிந்த கொங்கையாளாகிய கனக மாலைக்கும் வில் லேந்திய வீரனுகிய சீவகனுக்கும் மணக்கோலம் செய்தார்கள். திருமண நல்நாள் குறித்தார்கள். உலகறியத் தீ முன் மணந்து அழகிய கனகமாலையின் இளநலம் கனிந்த இன்பத்தை நுகர்கின்ருன் சீவகன். வார்: ரவிக்கை. வரிசிலை: கட்டிய வில். கோலம்: அழகு. வதுவை: திருமணம். படா முரசு: ஒலித்தல் நீங்கா முரச வாத்தியம். தீ வேட்டு: நெருப்பின் முன் மணந்து. கோதை: கனகமாலை.

அ ஒளிமிக்க மணிக்குழை பிரகாசிக்க, பொன் ஓலை மின்னலிட, மேகலாபரணம் சப்தம் செய்ய, சிறந்த

ஒப்புஇணை தனக்குஇ லாதான்
உறுவரை அகலம் மூழ்கிச்
செப்புஇணை அனைய செங்கேழ்
வனமுலை பொருது சேப்பக்
கற்பக மரத்தைப் புல்லிக்
கைவிடாது ஒழிந்து காமத்
துப்புரவு உமிழும் காம
வல்லியின் தோற்றம் ஒத்தாள். கூ

சிலம்பு புலம்ப, முத்து மாலையும் முடி மாலையும் தங்கச் சங்கிலியும் தனங்களை மோத, அழகிய பெருமை மிக்க இளைஞனோடு கனகமாலை ஆடினாள்.

குழை வில் வீச: காதணி ஒளிவிட. மேகலை: ஒட்டியாணம். கண்ணி: தலையில் சூடிய மாலை, நாண்: சங்கிலி. புடைப்ப: மோதியடிக்க. காமர்: அழகிய. அண்ணல்: பெருமைபெற்ற. குமரன்: சீவகலை. ஆயிழை: கனகமாலை. ஆடினாள்: காம ஆட்டம் புரிந்தாள்.

கூ. அவன் வரை மார்பிலே மூழ்கி வனமுலை பொருது சிவக்க கற்பக மரத்தில் படர்ந்து அதற்குப் பரிசுத்தம் நல்கும் காமவல்லியைப் போன்றுள் கனகமாலை.

ஒப்பு, இணை ஒரு பொருட் சொற்கள். உறுவரை அகலம் மூழ்கி: பெரிய மலை போன்ற மார்பிலே அழுங்கி. இணை: இரண்டு. செங்கேழ்: செம்மை நிறம். வனமுலை: அழகிய தனம். பொருது சேப்ப: போர் செய்து சிவந்துபோக. புல்லி: சேர்ந்து. துப்புரவு: புனிதத்தன்மை உமிழ்தல்: கொடுத்தல்.

காய்வுஉறு வேட்கை தன்னல்
கங்குலும் பகலும் விள்ளான்
வேய்வெறுத்து அமைந்த தோளாள்
விழுத்திரை அமுதம் என்று
சேய்நலம் கடந்த செல்வன்
திருநலம் தெளிந்திட்டு ஆற்ற,
வாய்விடாள் பருகி இட்டாள்
மடக்கிள்ளை மருட்டும் சொல்லாள். க0

திரைஇடைக் கொண்ட இன்னீர்
அமுதுஉயிர் பெற்றது என்னும்
உரைஉடைக் கோதை மாதர்
ஒளிநலம் நுகர்ந்து, நாளும்

க0. காம வேட்கையால் இரவும் பகலும் பிரியாது, மூங்கிலை வென்ற தோளாளை அமுதமாகப் பருகி, செல்வன் ஆற்ற, மடக்கிள்ளையை மருட்டும் சொல்லாளாகிய கனக மாலை வாய்விடாமல் பருகினள்.

காய்வு உறு வேட்கை: எரிகின்ற காமத்தீ கங்குல்: இரவு விள்ளான்: பிரியானாகி. வேய் வெறுத்து அமைந்த தோளாள்: மூங்கிலை முனிந்து நின்ற தோளைப்பெற்ற கனகமாலை. விழுத்திரை: சிறந்த கடல். சேய் நலம் கடந்த செல்வன்: ஒரு மகன் பெறவேண்டிய எழிலைத் தாண்டிய திருவாளன். ஆற்ற: தேற்றுவிக்க. வாய் விடாள் பருகி இட்டாள்: வாயை எடாமல் உண்டாள்.

கக. கடலிலே தோன்றிய இனிப நீர் வடிவமான அமுதமானது. உயிர் பெற்று வந்துவிட்டது என்று சொல்லந்

வரையுடை மார்பன் அங்கண்
வைகினன் என்ப மாதோ;
கரைகடல் அனைய தானைக்
காவலன் காத லானே. கக

தக்க கணகமாலையின் எழிலை மாந்தி, நாள்தோறும் வரை உடை மார்பனும் தானைக் காவலனும் ஆகிய சீவகன் காதலால் அங்கண் வைகினன்.

திரை: கடல். நுகர்ந்து: உண்டு.வரை உடை மார்பன்: மலை தோற்கும் மார்பைப் பெற்றவன். தானைக்காவலன்: படைகளையுடைய மன்னன்.

சீதை—இராமன் சீர்மணம்

இராம காதை

வல்லியை உயிர்த்தநில மங்கை,இவள் பாதம்
மெல்லிய; உறைக்கும்என அஞ்சிவெளி எங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பினள்என நத்தன்
நல்அணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள். கஉ

மண்முதல் அனைத்துலகின் மங்கையருள் எல்லாம்
கண்மணி எனத்தகைய கன்னிஎழில் காண
அண்ணல்மர பிற்சுடர் அருத்தியொடு தான்அவ்
விண்இழிவது ஒப்பதுஓர் விதானநிழல் வந்தாள். கங

கஉ. நடந்து வருகின்றாள் சீதை. நகைகள் ஒளியடிக்கின்றன. அவள் நடக்கும் இடமெல்லாம் வர்ண ஜாலங்கள். மகளின் மெல்லடி நோவாதிருப்பதற்காகச் சீதையைப் பெற்ற நிலமங்கையானவள், இலைக் கொழுந்துகளையும் பல நிறப் பூக்களையும் பரப்பியதைப் போன்றிருந்தது அக் காட்சி.

வல்லியை உயிர்த்த நிலமங்கை: கொடியனைய சீதையைப் பெற்ற பூமகள். மெல்லிய: மென்மை வாய்ந்தன. உறைக்கும்: துன்பு உறுத்தும். பல்லவம்: தளிர்.

கங. எல்லா உலகப் பெண்களுக்கும் கண்மணி போன்றுளாகிய கன்னி சீதையின் வனப்பைக்காண இராமனின் மூதாதையான இரவி, விருப்பத்தோடு வானத்தினின்றும்

அன்னவளை அல்லள்என ஆம்என அயிர்ப்பான்;
கன்னிஅமிழ் தத்தைஎதிர் கண்டகடல் வண்ணன்
உன்உயிர் நிலைப்பதுஓர் அருத்தியோடு உழைத்து,ஆண்டு
இன்அமிழ்து எழக்களிகொள் இந்திரனை ஒத்தான். கசு

அச்சுஎன நினைத்தமுதல் அந்தணன் நினைந்தான்,
பச்சைமலை ஒத்தபடி வத்துஅடல் இராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கைஇவள் என்றால்
இச்சிலை கிடக்க;மலை ஏழையும் இறுமே கடு

இறங்கி வந்தாற்போன்ற அவ்வளவு பளிச்சென்று ஒளி விடும் மேற்கட்டியின் நிழலிலே வருகின்றாள் மணப் பெண்.

அண்ணல்: இராமன் மரபிற்சுடர்: குல முதல்வனான சூரியன். அருத்தி: ஆசை. இழிதல்: இறங்குதல். விதானம்: மேற்கட்டி.

கசு. கண்டான் இராமன் அமிர்த கன்னியாகிய சீதையின் நல் வரவை தான் கன்னிமாடத்துக் கண்டவள் இவளா அல்லளா என ஐயுற்றான். அவளே இவள் எனத் தெளிந் தான் உயிர் தளிர்ப்பக் கடலைக் கலக்கி வருந்தி முடி வில் அங்கு இனிய அமிழ்து தோன்றக் கண்டு களித்த இந்திரன் பெற்ற மகிழ்ச்சியின் எல்லையையே இராமன் கண்டு விட்டான்.

அயிர்த்தல்: ஐயுறுதல். கன்னி அமிழ்தம்: சீதை. கடல் வண்ணன்: இராமன் உன் உயிர்: எண்ணத்தக்க உயிர்.

எங்கள்செய் தவத்தினில் இராமன்என வந்தோன்
சங்கிெனடு சக்கரம் உடைத்தனி முதற்பேர்
அங்கண்அரசு ஆதலின்அவ் அல்லிமலர் புல்லும்
மங்கைஇவள் ஆம்என வசிட்டன்மகிழ் வுற்ருன். கசா

கரு. சீதையின் கண் அழகைக்கண்ட விசுவாமித்திரன் என்ன நினைக்கின்ருன்:- நஞ்சு தோய்ந்த கூரிய விழிகளை யுடைய இப்பெண்ணை அடைவதற்கு, பச்சைமலை போன்ற வீர இராமன் இந்த வில்லை மட்டுந்தாஞ முறிப் பான்? ஏழு மலைகளையுமே ஒடித்துத் தொலைத்து விடு வானே என்று கூறுகிறது முனிவன் உள்ளம்.

அச்சு: அளவுகருவி. முதல் அந்தணன்: விசுவாமித்திர முனிவன். அடல்: வலிமை. வடி: கூர்மை. இச்சிலை கிடக்க: இந்த வில் கிடக்கட்டும். இருஞே: ஒடிக்க மாட்டாஞ.

கசா. அயோத்தி மன்னர்கள் குலகுரு வசிட்ட மகாமுனி எவ் வாறு எண்ணுகின்ருன்:- சங்கு சக்கரம் ஏந்திய தனி முதற் பெருங்கடவுளே இராமஞக நாங்கள் செய்த தவத்தால் தோன்றியிருப்பதால் அந்தச் செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகளே அவனை யடையப் போந்த இவள் என வசிட்டன் மனம் நினைக்கின்றது.

அல்லி: ஈண்டுத் தாமரை.

துன்றுபுரி கோதைஎழில் கண்டுஉலகு சூழ்வந்து
ஒன்றுபுரி கோலொடு தனித்திகிரி உய்ப்பான்,
என்றும்உலகு ஏழும் அரசு எய்தியுள னேனும்
இன்றுதிரு எய்தியது எனக்குஎன நினைந்தான். கஎ

நைவளம் நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வையம்நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்
கைகள்தலை புக்கன; கருத்துளதும் எல்லாம்
தெய்வம்என உற்ற;உடல் சிந்தைவயம் அன்றே. கஅ

கஎ. தயரத மன்னனானவன், எவ்வளவோ நாட்களாக உலகாளும் பேரரசைத் தான் பெற்றிருந்த போதினும் முன்னே தான்பெற்ற செல்வமெல்லாம் செல்வம் அல்ல உண்மையான செல்வம் இன்றுதான் தன்னை அடைகிறது என நினைக்கின்றான்.

துன்று: நிறைந்த. புரி: சுருண்ட. கோதை: கூந்தலையுடைய சீதை. ஒன்று புரிகோல்: ஒன்று படுத்தும் செங்கோல். தனித்திகிரி உய்ப்பான்: ஒப்பற்ற ஆணை ஆட்சி செலுத்துபவனாகிய தயரதன்.

கஅ. பண் பாடுதல்போல இனிக்கப்பேசும் சீதை நெருங்கி வந்தவுடன் அவளை மணக்கவிருக்கும் இராமனையும் யாவற்றையும் துறந்த மாதவரையும் ஒழிந்த மற்றையோர் கைகளெல்லாம் தலைமீது புகுந்து வணக்கம் செலுத்தின. சீதையை எல்லோர் மனங்களும் தெய்வம் என்றே

மாதவரை முற்கொள வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி சோரும்
தாதைஅருகு இட்டதவி சில்தனிஇ ருந்தாள்;
போதினை வெறுத்துஅரசர் பொன்மனை புகுந்தாள். கக

எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்து
மெய்வினை விடத்தும்முதல் ஐயம்விடல் உற்ருள்
ஐயனை அகத்தும்வடி வேபல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள். உ௦

எண்ணிவிட்டன. எனவே கைகள் தலை புகாமல் என் செய வல்லன? சிந்தை வழிச்செல்வதே உடலின் இயல்பு அல்லவா?

நைவளம்: ஓர் பண் வையம் நுகர் கொற்றவன் உலகை உண்ட திருமாலாகிய இராமன்.

கக. வசிட்டன் கோதமன் முதலினோரை வணங்கினுள்; தயரதன் பாத மலரைத் தொழுதாள்; களிப்பால் கண்களினின்றும் நீரைப் பெருக்கிக் கொண்டிருக்கும் தகப்பனுக்குப் பக்கத்திலே இடப்பட்டிருந்த ஆசனத்திலே ஒப்பின்றி அமர்ந்தாள் யார்? தாமரைப் பூவை வேண்டாம் என்று தள்ளிவிட்டு மன்னருடைய பொன் மனையிலே நுழைந்திருப்பவளாகிய சீதை

முற்கொள: முதலாவதாக. நெடுமன்னன்: நீண்ட புகழைக்கொண்ட தயரதன். கண்கள் பனிசோரும் தாதை: மகிழ்ச்சிக் கண்ணீர் வடிக்கும் தந்தை சனகன். தவிசு: இருக்கை.

கருங்கடை நெடுங்கண் ஒளி ஆறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்ட,உயிர் பெற்றுஇனிது உயிர்க்கும்
அருங்கலன் அணங்கு அரசி, ஆர்அமிழ்து அனைத்தும்
ஒருங்குடன் அருந்தினரை ஒத்துஉடல் தடித்தாள். உக

மன்றலின் வந்து மணத்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்;
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார். உஉ

உ௦. தன் உள்ளே இருக்கின்ற இராமனது வடிவம் சரிதானு என்று நேரில் இருக்கின்ற அவனைத் தன் கைவளை களைத் திருத்தும் மாதிரியாகக் கடைக் கண்ணினுலே கண்டு தெளிந்து கொண்டாள் சீதை.

இறுத்ததும் உரைத்து: ஒடித்ததையும் நீலமாலை சொல்ல. ஐயம்விடல் உற்றுள்: சந்தேகத்தைப் போக்கக் கருதியவளாய். திருத்துபு: சரிசெய்வது போல.

உக. கரிய கடை நீண்ட கண் ஒளி ஆருனது, நிறைவு பெற்ற கண்ணணுகிய பெரிய கடலிலே கலக்க, அதனுலே இன்உயிர்பெற்றுத் தளிர்க்கும் ஆபரணம் அனையாளாகிய மங்கையர்க்கரசியாம் சீதை, நிறைந்த அமிழ்தம் முழுதை யும் பிறருக்கின்றித் தானுகவே உண்டவரைப்போல உடல் பூரிப்பை அடைந்துவிட்டாள்.

கண்ணப் பெருங்கடல்: கண்ணனும் பெரிய கடல். மண்ட: பெருக. இனிது உயிர்த்தல்: நல்ல மூச்சு விடுதல். ஒருங்குடன்: ஒரேயடியாக.

கோமகன் முன்சன கன்"குளிர் நன்னீர்ப்
பூமக ளும்பொரு ளும்என நீஎன்
மாமகள் தன்னெடு மன்னுதி" என்ருத்
தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான். உரு

அந்தணர் ஆசி, அருங்கலம் அன்னுர்
தந்தபல் லாண்டிசை, தார்முடி மன்னர்
வந்தனே, வானவர் வாழ்த்துஒலி, போல
முந்திய சங்கம் முழங்கின மாதோ. உச

உஉ மணமண்டபத்திலே நுழைந்து மணையிலே ஏறி, சிறந்த வெற்றி வீரனுகிய இராமனும் அவன்மீது காதல்கொண்ட அவனுக்கு இனிய துணையாக அமைந்த அன்னநடைச் சீதையும் பொருத்தமாக அமர்ந்திருந்தனர். அக் காட்சி போகமும் யோகமும் கூடியிருந்தமை போன்றிருந்தது.

மன்றல்: மணமண்டபம். மணத்தவிசு: மணமக்கள் அமரும் பீடம். ஆர்வம்: ஆசை. போகம்: இன்பம். யோகம்: தவம்.

உங மிதிலே வேந்தன். இராமனுக்கு முன்னுக வந்து "குளிர்ச்சியான நல்ல நீரிலேயுள்ள தாமரையில் வாழும் திருமகளுடன் வாழ்கின்ற பரம்பொருளாகிய திருமாலேப்போல நீ என் சிறந்த மகளாகிய சீதையோடு நிலேபெற்று வாழ்வாயாக" என்று கூறி, இராமனுடைய தாமரைத் தடக்கையிலே சீதையைப் பிடித்துக்கொடுத்தான்.
கோமகன்: இராமன்.

மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்;
முற்றிய மாதவர் தாள்முறை சூடிக்
கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்
பொற்றொடி கைக்கொடு நன்மனை புக்கான். உடு

நூற்கடல் அன்னவர் சொற்கடல் நோக்கி
மாற்கடல் அன்ன மனத்தவ ளோடும்
கார்க்கடல் போற்கரு ணைக்கடல் பண்டைப்
பாற்கடல் அன்னதொர் பள்ளிஅ ணைந்தான். உசா

உச அந்தணர் வாழ்த்தொலி, நங்கையர் பாடும் பல்லாண்டிசை, மாலை அணிந்த மகுட மன்னர் வணக்க அரவம், விண்ணவர் பாராட்டுரை, சங்க முழக்கம் எல்லாம் சேர்ந்து ஒரே ஆரவாரந்தான்.

ஆசி: வாழ்த்து. அருங்கலம் அன்னார்: அரிய நகை போன்ற பெண்கள் வந்தனை: வழிபாட்டு உரை. சங்கம்: சங்கு ஊதும்ஓசை.

உடு மற்றும் செய்யவேண்டிய திருமணக் காரியங்களையெல்லாம் செய்து யாவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். இராமன் சீதையைக் கைப்பிடித்துக்கொண்டு முதிர்ந்த மாதவத்தோர் திருவடிகளை வணங்கிக் கொற்றவனையும் கும்பிட்டு நல்ல மனையினுள்ளே புகுந்தான்.

கொற்றவன்: தயரதன். கழல்: திருவடி.

உசா மதி நுட்பம் நூலோடு பெற்ற கல்வி கரைகண்ட பெரியாரின் அருள்வாழ்த்துக் கடலுள் ஆழ்ந்து, காதற் கடலாக விளங்கும் சீதையுடன், கருணைக் கடலாகிய கருங்கடல் போன்ற நிறத்தைக்கொண்ட இராமன், தனது பழைய பாற்கடல் போன்ற தூய்ய வெண்மை

நிறமான பள்ளியை நண்ணினுன். சீதை செம்மை. இராமன் கருமை. பள்ளி வெண்மை.

நூல்கடல் அன்னவர்: கல்விக்கடலின் கரைகண்ட அறிஞர். சொற்கடல் நோக்கி: ஏராளமான வாழ்த்தையும் அருள்நோக்கையும் பெற்று. மால். மயக்கம். கார்: கருமை. கருணைக்கடல்: இராமன். பள்ளி: படுக்கை.

புனிதவதியார்—பரமதத்தன் கலியாணம்

பெரிய புராணம்

மணம்இசைந்த நாள்ஓலை செலவிட்டு மங்கலநாள்
அணைய,வது வைத்தொழில்கள் ஆனஎலாம் அமைவித்தே
இணர்அலங்கல் மைந்தனையும் மண அணியின் எழில்விளக்கிப்
பணைமுரசம் எழுந்துஆர்ப்பக் காரைக்கால் பதிபுகுந்தரா். உஎ

அளிமிடைதார்த் தனதத்தன் அணிமாடத்து உள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்தமைத்துத்
தளிர்அடிமேல் நகைமயிலைத் தாதுஅவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணம் செய்தார்கள். உஅ

உஎ. திருமண ஏட்டை அனுப்பிவைத்து மணத்துக்குக் குறித்த நாள் வந்ததும்மன்றலுக்குரிய எல்லாம் முடித்து, பரமதத்தனுக்கு மாப்பிளைக் கோலம் செய்து, வாத்தியங் கள் முழங்கக், காரைக்கால் நகரத்துக்கு நாகைப்பட்டி னத்தினின்றும் மாப்பிள்ளை வீட்டார் சென்றார்கள்.

ஓலை: திருமண அழைப்பு. செலவிட்டு: அனுப்பி. அணைய: வர. இணர்: பூங்கொத்து. மைந்தன்: பரம தத்தன். பணை: பெரிய.

உஅ. வண்டுகள் மொய்க்கின்ற மாலையணிந்த தனதத்த னுடைய அழகான மாளிகையுள்ளே போந்து, மண முறை தெளிவிக்கும் நூல் முறைப்படி செய்யத்தக்க யாவும் செய்து, தளிர்போன்ற அடிகளைப் பெற்ற புன்

௩௦. திருமணப் பாட்டு

மங்கலமா மணவினைகள் முடித்துஇயல்பின் வைகுநாள்
தங்கள்குடிக்கு அரும்புதல்வி ஆதலினால் தனதத்தன்
பொங்குஒலிநீர் நாகையினில் போகாமே கணவனுடன்
அங்கண் அமர்ந்துஇனிதிருக்க அணிமாடம்மருங்கு அமைத்தான்.

மகட்கொடையின்மகிழ்சிறக்கும்வரம்பில்தனம்கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெரும்சிறப்பின் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெரும் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியும் கொள்கையினில் மேம்படுதல் மேவினான். ௩௦

முறுவல் பூக்கும் மயிலனைய சாயலாளாகிய புனித வதியை, தாது விரியும் மாலையை அணிந்த காளையாகிய பரமதத்தனுக்கு களிக்கின்ற உறவினரெல்லாம் பாராட்டத் திருமணம் செய்தனர்.

அளி: வண்டு மிடை: நெருங்கிப. தனதத்தன்: புனித வதியின் தந்தை.

௨௯. திருமணத்தை முடித்து இயற்கையாக அந்த மணமக்கள் தங்கிய காலத்து. தங்கள் குடிக்கு அருமையான மகள் ஆதலினாலே தந்தையான தனதத்தன் நாகைக்கு அனுப்பாமல் கணவனோடு தன்மகள் இனிய வாழ்க்கை நடாத்த, தன் மாளிகைக்குப் பக்கத்தில் அழகிய மாளிகை ஒன்றை நிறுவினான்.

அரும்புதல்வி: ஒரேமகள். பொங்கு ஒலி நீர் நாகை: கத்து கடல் சூழ் நாகை. அங்கண்: காரைக்காலிலேயே. மருங்கு: பக்கத்தில்.

௩௦. மகளைக் கொடுத்ததுடன் வரம்பில்லாத பொருளையும் மாமன் கொடுக்க அதனைப்பெற்று, ஈடில்லாத பெரிய

ஆங்குஅவன் தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கிய அன்பு உறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனை அறத்தின் பண்புவழா மையில்பயில்வார்.

சிறப்பையுடைய நிதிபதியின் குலமகனாகிய பரமதத்தன், தணியாக் காதலொடு மனை வாழ்க்கை நடத்தி, வாணிகம் செய்து வருவாயைப் பெருக்கி மிகுதியாக்கும் குறிக்கோளோடு மேம்பாடு அடைந்தான்.

மகட்கொடை: கன்னிகாதானம். வரம்பில் தனம்: கணக்கற்ற பொருள். நிதிபதி: மாப்பிள்ளையின் தந்தை. தகைப்பு: தடுத்தல். வளம்: வருவாய்.

௩௧. அவ்விடத்து அந்தப் பரமதத்தனுக்கு இல்வாழ்க்கைக்கு அரிய துணையாகப் பொருந்துகின்ற காரைக்கால் அம்மையாரானவர், சிவபிரான் திருவடிக்கீழ் ஓங்கிப் பெருகிய அன்புக் காதல் நீங்காதவராகி, அதனால் மனை அறத்தின் பண்பாடடுக்குக் குறை ஏதும் வாராமல் ஒழுகுவாராயினர்.

பொரு விடையார்: போர்க்காளையை உடைய சிவபெருமான்

சங்கிலியார்—சுந்தரர் காதல் மணம்

பெரிய புராணம்

மின்ஆர் சடையார் தமக்குஆளாம்
விதியால் வாழும் எனைவருத்தித்
தன்ஆர் அருளால் வரும்பேறு
தவத்தால் அணையா வகைதடுத்தே
என்ஆர் உயிரும் எழில்மலரும்
கூடப் பிணைக்கும் இவள்தன்னைப்
பொன்ஆர் இதழி முடியார்பால்
பெறுவேன் என்று போய்ப்புக்கார். ௩௨

---

௩௨. சிவபெருமானுக்கு அடிமைப்பட்டு முறையாக வாழ்கின்ற என்னைத் துன்புறுத்தி, அப்பெருமான் அருளால் கிடைக்கும் பாக்கியத்தைத் தவத்தினாலே நான் பெறுமல் தடுத்து, கடவுளுக்குக் கட்டுகின்ற பூமாலையில் மலர்களோடு என் ஆருயிரையும் சேர்த்துக் கட்டுகின்ற இப்பெண்ணை, பொன்போன்ற கொன்றைப் பூமுடியைக் கொண்ட சிவனிடம் கேட்டுப் பெறுவேன் எனச் சந்நிதியில் புகுந்தார்.

மின் ஆர் சடையார்: கங்கை தங்கிய சடையையுடைய கடவுள். "என் ஆர் உயிரும் எழில்மலரும் கூடப் பிணைக்கும் இவள்" என்பது "முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா இளைஞர் ஆருயிரும், திருகிச் செருகும் குழல் மடவீர்" என்ற கலிங்கத்துப் பரணிப்பாடலொடு ஒப்பது.

மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும்
அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதல் உடையீர்! அடியேனுக்கு,
இங்கு நுமக்குத் திருமாலை
தொடுத்துஎன் உள்ளத் தொடைஅவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்துஎன் வருத்தம் தீரும்என. ௩௩

உம்பர் உய்ய உலகுஉய்ய
ஓல வேலை விடம்உண்ட
தம்பி ரானுர் வன்தொண்டர்
தம்பால் எய்திச் சங்கிலியை

---

௩௩. பார்வதியை உடம்பில் ஒரு பக்கத்திலே வைத்துக் களிப்படைவதோடு அமையாமல் அழகான நீண்ட சடைக்குள்ளே கங்கையைக் காதலித்து மறைத்து வைத்திருக்கும் சிவனாரே! இங்கு உமக்குத் திருமாலை கட்டும், எனது உள்ளக் கட்டை அவிழ்த்தெறிந்த திங்கள் முகத்துச் சங்கிலியாரை அடியேனுக்கு அளித் தருளி, என் கவலையைப் போக்கவேண்டும் என விண்ணப்பிக்க.

மங்கை: உமை. கரத்தல்: ஒளித்துவைத்தல். உள்ளத் தொடை அவிழ்த்த: மனக்கட்டைச் சிதற அடித்த. வதனம்: முகம்.

௩௪. வானுலகம் உய்ய இம் மண்ணுலகமும் உய்ய ஆரவாரக் கடல் நஞ்சு குடித்த தலைவர், நம்பி ஆரூரர்பால்

இம்பர் உலகில் யாவருக்கும்
எய்த ஒண்ணு இருந்தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றேம்;
கொண்ட கவலை ஒழிகென்ன. ௩௪

அன்று வெண்ணெய் நல்லூரில்
வலிய ஆண்டு கொண்டருளி
ஒன்றும் அறியா நாயேனுக்கு
உறுதி அளித்தீர்! உயிர்காக்க
இன்றும் இவளை மணம்புணர்க்க
ஏன்று நின்றீர்! எனப்போற்றி
மன்றல் மலர்ச்சே வடிஇணைக்கீழ்
வணங்கி மகிழ்ந்தார் வன்தொண்டர். ௩௫

சென்று, "இந்த உலகத்திலே எவரும் அடையமுடியாத பெரிய தவக் கொம்பாகிய சங்கிலி நாச்சியாரை உனக்கு அளிக்கின்றேம்; மனத்தே கொண்ட கவலை நீங்குக" என்று சிவபெருமானுர் செப்ப.

வன்தொண்டர்: சுந்தரமூர்த்தி.

௩௫. "அன்றைக்குத் திருவெண்ணெய் நல்லூரில் என்னை வலிந்து ஆட்கொண்டருளி ஒன்றும் தெரியாத நாயனைய எனக்கு உய்வு தந்தீர்; செல்லநிற்கும் என் உயிரைக் காப்பாற்ற இன்றைக்கு இச் சங்கிலியை நான் அணையத் தக்க பொறுப்பை ஏற்றுக்கொண்டு நின்றீர்." என்று பாராட்டி, மணம் வீசும் மலரனைய செவ்விய திருவடி இரண்டினும் வீழ்ந்து கும்பிட்டு மகிழ்ச்சியை அடைந்தார் சுந்தரர்.

உறுதி: உறுபயன். மன்றல்: மணம்.

சாரும் தவத்துச் சங்கிலி!கேள்
சால என்பால் அன்புடையான்;
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள
உரியான்; உன்னை எனைஇரந்தான்;
வார்கொள் முலையாய்! நீஅவனை
மணத்தால் அணைவாய்! மகிழ்ந்துஎன்றார். ௩௬

''நம்பிஆ ரூரனுக்கு நங்கைசங் கிலிதன்னை
இம்பர்ஞா லத்திடைநம் ஏவலினல் மணவினைசெய்து
உம்பர்வாழ் உலகுஅறிய அளிப்பீர்''என்று உணர்த்துதலும்
தம்பிரான்திருத்தொண்டர்அருள்தலைமேல் கொண்டுஎழுவார்.

---

௩௬. பொருந்திய தவத்தைப் பெற்ற சங்கிலி! கேட்பாயாக; '' மிகவும் என்னிடம் அன்புகொண்டவன்; மேருமலையை விட ஓங்கிய தவத்தைப் பெற்றவன்; வெண்ணெய் நல்லூரில் எல்லோரும் அறிய யான் ஆட்கொள்ளும் உரிமை அடைந்தவன்; அவன் உன்னைத் தரும்படி என்னை இரந்து கேட்கின்றான்; கச்சு அணிந்த கொங்கையாய்! நீ அச் சுந்தரனை மகிழ்ந்து மணந்து அணைவாயாக '' என்று இயம்பினர் சிவபெருமான்.

௩௭. ''நம்பியாகிய ஆரூரனுக்கு நங்கையாகிய சங்கிலியை இந்த உலகத்திலே நமது ஆணைப்படி திருமணஞ் செய்து, வானுலகத்தாரும் அறியுமாறு கொடுப்பீராக'' என்று சிவபிரான் அறிவிக்க, அவர்தம் அடியார், சிவனருள் தலைக்கொண்டு எழுவாராயினர்.

மண்நிறைந்த பெரும்செல்வத் திருவொற்றி யூர்மன்னும்
எண்நிறைந்த திருத்தொண்டர் எழிற்பதியோர் உடன்ஈண்டி
உள்நிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர்பூ மழைபொழியக்
கண்நிறைந்த பெரும்சிறப்பிற் கலியாணம் செய்தளித்தார் ௩௨

பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன் அருளாலே
வண்டுஅமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட்டுஉண்டுஉயிர்த்துஉற்றுஅமர்ந்திருந்தார்காதலினால்

---

௩௮. பூமியிலே நிறைந்த பெரிய செல்வம் பொருந்திய திருவொற்றியூரில் வாழும் கணக்கற்ற சிவனடியார்களும் மற்றும் அவ்வூராரும் ஒன்றுகூடி, மனமார மகிழ்ந்து வானவர் மலர்மழை வழங்க, கண்நிறைந்த மிக்க சிறப்போடு கலியாணம்செய்து கொடுத்தார்கள்.

௩௯. "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று" என்பது அப்படியே அழகான திருக்குறள் ஆட்சி.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம் புலனும் ஒண்தொடி கண்ணே உள" என்பது குறள்.

பழவினைத் தொடர்பாலும் பசுபதி அருளாலும் வண்டு அமர் பூங்குழலாராகிய சங்கிலியை அணைந்த சுந்தரனார், திருமகளை வென்ற அவள் தூய அழகைக் கண்ணால் பருகினார்; அவள் கிள்ளைப் பேச்சைக் காதால் கேட்டார்; அன்னாள் குமுதவாய்த் தேனைக் குடித்துச் சுவைத்தார்; அம் மெல்லியல் நறுமணத்தை முகர்ந்து மகிந்தார்; அவள் மெய்லானை அணைந்து காதற் கடலின் கரைகண்டார்:

யாழின்மொழி எழில்முறுவல் இருகுழைமேல் கடைபிறழும்
மாழைவிழி வனமுலையார் மணிஅல்குல் துறைபடிந்து
விழும்அவர்க்கு இடைதோன்றி மிகும்புலவி புணர்ச்சிக்கண்
ஊழியாம் ஒருகணம்தான் அவ்வூழி ஒருகணமாம். ௪௦

பசுபதி: சிவபிரான். புண்டரிகத்தவள்: தாமரைவாழ் இலக்குமி. புறங்கண்ட: முதுகுகாட்டி ஓடச்செய்த. தூநலம்: புனிதமான அழகு.

௪௦ யாழின் இனிய ஒலி போன்ற பேச்சும் அழகிய பற்களும் இரண்டு காதுகளையும் மோதுகின்ற கண்களும் அழகிய தனங்களும் உடைய சங்கிலியாரின் அல்குல் துறையிலே படிந்து, விழுகின்றசுந்தரனுர்க்குப்புலவியிலே ஒருகணம் ஊழியாக இருக்கிறது; புணர்ச்சியிலே ஊழி ஒரு கணமாக இருக்கிறது.

யாழ் : வீணை. முறுவல் : பல். மாழை: அழகு.

சித்திராங்கதை-அருச்சுனன் கந்தருவமணம்

வில்லி பாரதம்

வேதியரோடு அக்காவில் இளைப்பாறி
இருந்த அளவில் மின்கு ழாம்போல்
தாதியரும் சேடியரும் தற்சூழச்
சிலைமதனன் தனிசே விக்கச்
சோதிஅரிச் சிலம்புஅரற்றத் துணைநெடுங்கண்
செவிஅளப்பத் தொடித்தோள் வீசி
ஆதிஅர விந்தைஎன நிருபன்மகள்
விளையாடற்கு ஆங்கு வந்தாள். ௪௧

'பச்' என்ற திருநிறமும் சேயிதழும்
வெண்நகையும் பார்வை என்னும்

---

௪௧ அந்தணர்களுடன் அந்தச் சோலையிலே இளைப்பாறி அருச்சுனன் இருந்த சமயத்து, மின்னல் கூட்டம்போலத் தாதிமாரும் தோழிமாரும் தன்னைச்சுற்றிவர, மாரவேள் தனிவணக்கம் செலுத்தி முன்போத, ஒளியும் ஒலியும் கொண்ட சிலம்பு அலம்ப, நீண்ட இருவிழிகளும் காதுகளை அளப்ப, வளை ஒலிப்பக் கைவிசி, பழைய திருமகளே என்று சொல்லத்தக்கவாறு மன்னன் மகள் விளையாடுதற்காக அப்பொழிலுக்கு வந்தாள்.

தாதி : பணிப்பெண். சேடி : தோழி. அரி : பருக்கைக் கற்கள். தொடி : வளை.

௪௨ பச்சைப்பசேல் என்ற அழகான நிறத்தையும் சிவந்த உதட்டையும் வெள்ளைப் பற்களையும் கண்கள் என்று

நச்சுஅம்பும் அமுதுஊற நவிற்றுகின்ற
மடமொழியும் நாணும் பூணும்
கச்சின்கண் அடங்காத கனதனமும்
நுண்இடையும் கண்டு சோர்ந்து
பிச்சன்போல் ஆயினன்;அப் பெண்கொடிமெய்ந்
நலமுழுதும் பெறுவான் நின்றான். ௪௨

புத்திரர்வேறு இல்லாது புரிவு அரிய
தவம்புரிந்து பூழி வேந்தன்
சித்திரவா கனன்பயந்த சித்திராங்
கதைஎன்னும் செஞ்சொல் வஞ்சி,
பத்திரமும் நறுமலரும் அவயவம்போல்
விளங்குவன பலவும் கொய்து
மித்திரமா மருகளிடன் விரவிஒரு
செய்குன்றின் மேவி னாளே. ௪௩

சொல்லுகின்ற நஞ்சு தீட்டிய அம்புகளையும் அமுதம் ஊறப் பேசும் இளம் பேச்சையும் நாணத்தையும் நகைகளையும் கச்சுக்குள்ளே அடங்காமல் திமிறும் கனத்த தனங்களையும் சிறிய இடையையும் கண்டு மயங்கி, பித்துப் பிடித்தவனாகி விட்டான், அந்தப் பெண்கொடியின் உடல் நலம் எல்லாவற்றையும் நுகர இருப்பவனாகிய பார்த்தன்.

௪௩. வேறு பிள்ளையில்லாது அருந்தவம் செய்து சித்திர வாகன பாண்டியன் பெற்ற சித்திராங்கதை என்ற இனிய பேச்சினளாகிய கொடியனையாள், தளிர்களும் நல்ல பூக்களும் தன்னுடைய அங்கங்களைப் போன்றன

முன்உருவம் தனைமாற்றி முகில்வாகன்
திருமதலை மோகி ஆகி,
தன்உருவம் தனைக்கொண்டு சாமனிலும்
காமனிலும் தயங்கும் மெய்யோன்,
பொன்உருவம் எனமலர்ந்து பொலிந்ததுஒரு
சண்பகத்தின் பூந்தண் நீழல்.
மின்உருவ நுண்இடையாள் விழிகளிக்கும்
படிநின்றான், வீரர் ஏறே. ௪௪

வாகிய பலவற்றையும் பறித்து, தோழியருடன் கலந்து ஒப்பற்ற செயற்கை மலையை அடைந்தாள்.
பூழிவேந்தன்; பாண்டியன். செய் குன்று: விளையாடு வதற்காக மண்ணால் ஆக்கப்பெற்ற மலை.

௪௪. இந்திரன் மகனாகிய விஜயன். எடுத்த துறவி வேடத்தை மாற்றி, ஆசையுடையவனாக, தனது அருச்சுன வடிவத்தைக்கொண்டு சாமனையும் காமனையும் வென்று விளங்குமவன் பொன்போன்ற நிறமாகப் பூத்துப் பொலியும் சண்பக மரத்தின் குளிர்ந்த நிழலிலே, மின் உருவத்தைப் பெற்ற நுண்மையான இடையையுடைய பாண்டியன் கன்னியின கண்களிக்குமாறு நின்றான். அப்படி நின்றவன் யார்? வீரர்களின் சிம்மம்.

முகில்வாகன்: இந்திரன் சாமன்: காமன் தம்பி. அவன் அழகிற் சிறந்தவன்.

வண்டானம் திரிதடத்து வரிவண்டின்
இனம்பாட மயில்கள் ஆட
தண்தார்மெய்க் கிளிக்கூட்டம் சான்றோர்கள்
உரைபயிற்றத் தமிழ்கள் மூன்றும்
கொண்டாடி இளம்பூவைக் குழாம்தலைசாய்த்து
உளம்உருகும் குன்றின் ஆங்கட்
கண்டாள்அக் குமரனைத்தம் கொடிக்கயலைப்
புறங்காணும் கண்ணி னாளே. சரு

செந்திருவை அனையாளும் திருமாலை
அனையானும் சிந்தை ஒன்றாய்
வந்துஇருவர் விலோசனமும் தடையின்றி
உறவாடி மகிழ்ச்சி கூர்ந்து,

சரு நாரைகள் உலாவும் குளத்திலே வரிவண்டுக் கூட்டங்கள் பாட, மயில்கள் ஆட, குளிர்ந்த மாலை போலக் கழுத்தைச் சுற்றிலும் கோடுகள் கொண்ட கிளிகள் சால்புடையார் பேச்சைப் பழக, இளம் பூவைக் குழு முத்தமிழையும் பயின்று பாராட்டித் தலைபசைத்து மனம் உருகும் அச் செய் குன்றினிடத்திலே, தங்கள் கொடியிலுள்ள மீனை வென்ற கண்ணுளாகிய சித்திராங்கதை, அந்த இளைஞனைப் பார்த்தாள்.

வண்டானம்: நாரை. பூவை: நாகணவாய்ப்புள்.(மைனா)

சசு. திருமகளை ஒத்த அவளும் திருமாலையனைய அவனும் மனம் ஒருப்பட்டு நான்கு கண்களும் தங்குதடையின்றி உறவாடக் களிப்படைந்து, வெந்து வடிவத்தை இழந்த காமன் திரும்ப வடிவம் பெற்று இரதி தேவியுடன்

வெந்துஉருவம் இழந்தமதன் மீளவும்வந்து
இரதியுடன் மேவு மாபோல்,
கந்தருவ முறைமையினுல் கடவுளர்க்கும்
கிடையாத காமம் துய்த்தார். சரு

கூடிஇரு வரும்ஒருவர் எனஇதயம்
கலந்ததற்பின் குறித்த தூநீர்
ஆடியவந் ததும்தன்னை அருச்சுனன்என்
பதும்இளமான் அறியக் கூறி,
நீடியதுஎன்று ஐயுறுவர் நீஇனிஏகு
எனஉரைப்ப நெடுங்கண் ணுள்போய்ச்
சேடியருக்கு அஞ்ஞான்று நிகழ்ந்தஎலாம்
மகிழ்ந்துஉருகிச் செப்பி னுளே. சஎ

அணையுமாப்போல. கந்தருவமுறைப்படி. கடவுளர்களும் அடையாத இன்பத்தை நுகர்ந்தார்கள். ' கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் " வேறு என்ன வேண்டும்? விலோசனம்: கண். கந்தருவ முறையாவது, பெற்றோரையும் மற்றோரையும் எதிர்பாராது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதலித்து அணையும் சேர்க்கை.

சஎ. இருவரும் சேர்ந்து ஒருவர் என்னுமாறு மனம் கலந்த பிறகு, தான் பாண்டு மகன் பற்குனன் எனவும் புனித நீர்படிவான் வந்தனன் என்றும் அவ் இளமாது உணரச் சொல்லி, " நீண்ட நேரமாக உன்னைக் காணவில்லையே என ஐயங்கொள்வராகலின் நீ சென்று விடு " எனக் காதலன் சொல்ல, நீண்ட கண்ணினளாகிய அவள் சென்று சேடியரிடத்திலே அங்கு நடந்த எல்லாவற்றையும் மகிழ்ந்து உருகிச் சொன்னுள்.

கவுரியர்கோன் திருமகளைக் கண்அனையார்
கொண்டுபோய்க் கன்னி மாடத்து
அவிருமணிப் பரியங்கத்து ஐஅமளி
ஏற்றியபின், அநங்கன் போரால்
நவிர் உடைமா மயல்உழந்து நயனங்கள்
பொருந்தாமல் நாண்உ ருமல்
தர்விகளனவும் தவிராமல் தன்விரகம்
கரை அழிந்து தளர்ந்தாள் மன்னோ. சஅ

தங்கள்மலைச் சந்தனத்தைத் தழற்குழம்போ
இதுஎன்னும்; தாபம் தோன்றத்
தங்கள்கடல் தண்முத்தைக் கண்முத்தால்
நீருக்கும்; தக்கோர் ஆய்ந்த

சஅ பாண்டியன் திருமகளாகிய அக்கன்னியைக் கண்ணை ஒத்த சேடியர் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று கன்னி மாடத்திலே விளங்கும் மணிகள் பதித்த கட்டிலிலே பள்ளியிலே கிடத்திய பின்னர், அந்தக் கன்னியானவள் காமப்போரால் மயங்கி கண் மூடாமல் நாணத்தையும் விட்டு 'இது தகாதது' எனத் தோழியர் கூறியதையும் பொருட்படுத்தாமல் விரக நோயால் கரைகடந்து வருந்தினள்.

கவுரியர் கோன்: பாண்டிய மன்னன், பரியங்கம்: கட்டில். ஐ அமளி: ஐந்து பண்பு கொண்ட படுக்கை. அவை அழகு குளிர்ச்சி, மென்மை, மணம், வெண்மை என்பன. நவிர்: புல்லிய தன்மை. நயனம்: கண். விரகம்: பிரிவால் தோன்றும் காம நோய்.

தங்கள்தமிழ்க் குழல்இசையைத் தன்செவிக்கு
விடம்என்னும்; தபனன் ஏகத்
தங்கள்குலக் கலைமதியைத் தபனன்எனும்;
என்பட்டாள்! தனிபொ றுதாள். சசு

அங்குஉயிர்போல் இருமருகும் ஆயமட
மகளிர்இருந்து ஆற்ற ஆற்றக்
கங்குல்எனும் பெரும்கடலைக் கரைகண்டாள்;
கடற்புறத்தே கதிரும் கண்டாள்;

சசு. தங்கள் மலையிலேயிருந்து பிறந்து வந்த சந்தனத்தை அள்ளித் தோழிகள் பூசுகின்றார்கள். ''ஐயோ! நெருப்புக் குழம்பை அப்புகின்றீர்களே'' என்று கூறுகிறாள். காமநோய்ப் பட்டார்க்கு ''செழும் சீதச் சந்தனம்'' செந்தழலின் சாறுகத்தானே இருக்கும். தங்கள் கடலிலே தோன்றிய குளிர்ந்த முத்து மாலையைக் கண்ணீரின் வெப்பத்தால் தூளாக்குவாள். தக்கவர்களால் ஆராயப்பட்ட தங்கட்குச் சொந்தமான தமிழ் இசைத்துப் பாடும் குழலோசை தம் காதுகட்கு நஞ்சாக இருக்கிறதே என்பாள். சூரியன் போனபிறகு வானத்தில் தோன்றும் தங்கள் குலமுதல்வனான சந்திரனை நெருப்பாக நினைக்கின்றாள். இப்படியாக எவ்வளவு பாடு பட்டு விட்டாள் சித்திராங்கதை. தனிமையைப் பொறுக்க மாட்டாமையினாலே.

சந்தனம், முத்து, தமிழ், மதி எல்லாம் பாண்டியனுக்குச் சொந்தமாதலால் தங்களுடையவை என்றார்.

இங்குஇவள்போய் மலர்க்காவில் எழில்விசயற்கு
ஈடுஅழிந்த இன்னல் எல்லாம்
சங்குஎறியும் தடம்பொருநைத் துறைவனுக்குச்
செவிலியராம் தாயர் சொன்னர். ருo

ஐந்தருவின் நிழலில்வாழ் அரியுடனே
ஓர் அரிஆ சனத்தில் வைகிப்
புந்திஉற ஒருவரும்முன் பூணுத
மணிஆரம் பூண்ட கோமான்

தழல் குழம்பு: நெருப்புச்சாறு. தாபம்: வெப்பம். தபனன்: சூரியன்.

ருo அங்கு இரண்டு பக்கமும் உயிர் போன்ற தோழிகள் அமர்ந்து தேறுதல் சொல்லச் சொல்ல, இரவு என்ற பெரிய கடலின் கரையைக் கண்டாள் பாண்டியன் கன்னி; சூரியனையும் பார்த்தே விட்டாள். இவ்விடத்து இப்பெண் சென்று பூங்காவிலே அழகிய அருச்சுனனிடத்திலே நிறை கடந்த துன்பத்தை யெல்லாம் சங்குகளைக் கரையிலே வீசும் பெரிய பொருநைத் துறைவனாகிய பாண்டியனிடம் வளர்ப்புத்தாயர் சொன்னர்கள்.
ஆயம்: தோழியர் கூட்டம். கங்குல்; இரவு.
கதிர்: சூரியன். பொருநை: தாம்பிரபருணியாறு.

ருக ஐந்து மரங்களின் நிழலிலே வாழ்கின்ற இந்திரனோடு ஒப்பற்ற சிங்காதனத்திலே இருந்து, மனம் பொருந்த முன்னே எவரும் அணிந்தறியாத மணிமாலையைத் தாங்கியவனும் கூடல் வணங்கும் திருவடியையுடையவனுமான பாண்டிய மன்னன், அந்தப் பேச்சைக் கேட்ட

அந்தஉரை செவிப்படலும் அதிதூரம்
விழைவுடன்சென்று ஆடு தீர்த்தம்
வந்ததுநம் தவப்பயன்என்று உட்கொண்டான்
மகோததியும் வணங்கும் தாளான். ருக

வழுதிதிரு மகள்கொடுத்த மையலினால்
வடிவமும்தன் மனமும் வேறுப்
பொழுதுவிடிவு அளவுமதன் பூசலிலே
கருத்துஅழிந்து பூவாம் வாளி
உழுதகொடும் புண்வழியே ஊசிநுழைந்
தெனத்தென்றல் ஊர ஊர
விழிதுயிலா விசயனும்அவ் விபுதருடன்
துயில்உணர்ந்து விதியும் செய்தான். ருஉ

வுடன் நீண்ட தூரத்திற்கு விருப்பத்தோடு விஜயன் நீராடப்போந்தது நாம் செய்த தவத்தின் பயனே என நினைந்தான். இந்திரனோடு அரியாசனத்திருந்து ஆரம் பூண்டதும் கடல் வணக்கம் பெற்றதும் திருவிளையாடற் கதைகள்.

ஐந்துதரு: சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பன. முதல் அரி: இந்திரன். இரண்டாவது அரி: சிங்கம். மகோததி: கடல்.

ருஉ பாண்டியனது திருமகள் ஈந்தமயக்கத்தினாலே வடிவமும் மனமும் வேறுபட்டுப் பொழுது விடியும்வரை காமன் போரிலே கருத்து அழியப்பெற்று, மதன் செலுத்திய மலர் - அம்பு உழுத புண்ணிலே ஊசியை நுழைத்ததைப் போலத் தென்றல் ஊர ஊர, கண் உறங்காத்

பஞ்சவரில் நடுப்பிறந்தோன் பஞ்சவன்பேர்
அவைஎய்திப் பஞ்ச பாண
வஞ்சகன்செய் வஞ்சனையால் மதிமயங்கி
இருந்துழி,அம் மதுரை வேந்தன்
சஞ்சரிக நறுமலர்த்தார்த் தனஞ்செயன்என்று
அறிந்துஎழுந்து தழீஇக்கொண்டு ஆங்கண்
அஞ்சல்இனி உனக்குரியாள் யான்பயந்த
கடற்பிறவா அமுதம் என்றான். ௫௬

தனஞ்சயனும் கூட உறங்கி எழுந்த முனிவரோடு துயில் நீங்கினவனைப்போல எழுந்து காலைக்கடனைச் செய்தான்.

வழுதி: பாண்டியன். மதன் பூசல்: காமன்போர்.

௫௬. ஐவருக்குள்ளே நடுவில் பிறந்தவனாகிய அருச்சுனன் பாண்டியனுடைய பெரிய சபையை அடைந்து ஐந்து அம்பு எய்யும் வஞ்சகனாகிய மன்மதன் செய்யும் வஞ்சனையினாலே புத்தி தடுமாறி யிருந்தபோது, அந்த மதுரை அரசன், வண்டு விழ் நல்ல மாலையுடைய பற்குனன் இவனே என அறிந்து எழுந்து அவனைத் தழுவி, " அஞ்சற்க. யான் பெற்ற கடலிலே பிறவாத அமிர்தம் போன்றவள் உனக்கே உரியாள் " என்று இயம்பினான்.

" கடற்பிறவா அமுதம் " என்பது " அலையிடப் பிறவா அமுதே " என்ற சிலப்பதிகார அடியைப் பின்பற்றியது

பஞ்சவன்: பாண்டியன். சஞ்சரிகம்: வண்டு.

தெண்டிரைகை தொழுகழலோன் திருமகட்கு
வதுவைஎனச் சேர சோழர்
எண்டிசையின் முடிவேந்தர் எல்லோரும்
முனிகணத்தோர் எவரும் ஈண்ட
அண்டர்பிரான் அளித்தசிலை ஆண்தகையை
அலங்காரம் அனைத்தும் செய்து
மண்டபம்ஒன் றினில் அறுகால் வண்ணமணிப்
பலகையின்மேல் வைத்தார் அன்றே. ருச

கோமடந்தை களிகூரப் புகழ்மடந்தை
களிகூரக் கொற்ற விந்தை
மாமடந்தை களிகூற மணவினைஒப்
பனைக்குரிய மடந்தை மார்கள்,

ருச. கடல் வணங்கும் கழற் காலனான பாண்டியனது செல்விக்குத் திருமணம் என்று கேட்டவுடன் சேரமன்னன் சோழ அரசன் உள்ளிட்ட எட்டுத் திக்குகளிலும் உள்ள முடிமன்னர் அனைவரும் முனிக் கூட்டங்களும் வந்து கூட, தேவேந்திரன் மகனாகிய வில் விசயனாகிய மணமகனுக்குக் குறைவற மணக்கோலம் செய்து மணமண்டபத்திலே ஆறுகால் கொண்ட அழகிய இரத்தினங்கள் பதித்த பிடத்திலே அமர்த்தினார்கள்.

ருரு. கோமடந்தையும் புகழ் மடந்தையும் கொற்ற விந்தையாகிய மாமடந்தையும் மகிழ,மணப்பெண்ணை அலங்கரிக்கும் உரிமைபூண்ட மகளிர்கள், திருமகளை ஒத்த செம்மேனியளான சித்திராங்கதையை, அலங்கரித்த வெண்மையான முத்து நகைகளாலே கலைமகளுக்கு நிகரான

பூமடந்தை அனையாளைப் பூட்டியவெண்
தரளமணிப் பூண்க ளாலே
நாமடந்தை நிகராக்கி நாயகன்தன்
வலப்பாகம் நண்ணு வித்தார். ருரு

இந்திரனும் சசியும்என இறையோனும்
உமையும்என எம்பி ரானும்
செந்திருவும் எனக்காம தேவும்இர
தியும்எனவெம் சிலைவ லோனும்
சந்தணிபூண் முலையாளும் சதுர்மறையோர்
சடங்குஇயற்றத் தழல்சான் ருகத்
துந்துபியின் குலம்முழங்கச் சுரிசங்கின்
குழாம்தழங்கத் துலங்க வேட்டார். ருசா

வெண்மை நிறம் பெற்றவளாக்கிக் கணவனுக்கு வலது பக்கத்திலே மணத் தவிசிலே அமர்த்தினர்கள்.
கோமடந்தை: அரச இலக்குமி. விந்தை: வீர இலக்குமி.

ருசா. இந்திரனையும் இந்திராணியையும் போலவும் சிவனையும் உமையையும் போலவும் திருமாலையும் திருமகளையும் போலவும் மன்மதனையும் இரதியையும் போலவும் வில் வல்ல காளையும் சந்தனம் திமிர்ந்த தனத்தாளாகிய செல்வியும் மணத்தவிசிலேஇருந்து, நான்மறையோர் சடங்குசெய்ய, நெருப்புக்கடவுள் சாட்சியாக வாத்தியக் கூட்டங்கள் ஒலிக்க, சங்கினங்கள் முழங்க மணந்து கொண்டார்கள்.

சசி: இந்திரன் மனைவி.

நோக்கியகண் இமையாமல் நோக்கி நோக்கி
நுண்ணியமென் புலவியிலே நொந்து நொந்து
தேக்கியசெங் கனிஇதழ்ஆர் அமுதுண்டு உண்டு
சேர்த்தியகைந் நெகிழாமல் சேர்ந்து சேர்ந்து
தூக்கியபொன் துலையின்அநு ராகம் மேன்மேல்
தொடரஅரும் பெரும்போகம் துய்த்தார்; முன்னைப்
பாக்கியம்வந்து இருவருக்கும் பலித்தது அல்லால்
பாயல்நலத்து இப்படியரர் பயன்பெற் றாரே. ௫௭

௫௭ பார்த்த கண்கள் மூடாமல் பார்த்துப்பார்த்து, நுணுக்கமான மெல்லிய ஊடலிலே வருந்தி வருந்தி, தேக்கி வைக்கப்பெற்ற செவ்விய கனிபோன்ற உதட்டிலே நிறைந்த அமுதத்தைப் பருகிப் பருகி, கட்டிய கைகள் விலகாமல் அணைந்து அணைந்து, தராசு முனையைப் போல இருவருக்கும் சமமாக ஆசை மேலும் மேலும் தொடர, அரிய பெரிய இன்பத்தை நுகர்ந்தனர் சித்திராங்கதை அருச்சுனன் ஆகிய இருவரும். முன் செய்த பாக்கியப்பயனை இருவரும் பெற்றனரே யன்றி சேர்க்கை நலத்தில் இவ்வாறு 'பயன் அடைந்தார்வேறு யாரும் இலர்.

துலை: தராசு. அநுராகம்: ஆசை. பாயல்: படுக்கை.

வள்ளி—முருகன் கலப்பு மணம்

கந்த புராணம்

அன்னதோர் வேலை தன்னில்
அறுமுகம் உடைய வள்ளல்
தன்உழை இருந்த நங்கை
தனை அரு ளோடு நோக்கக்
கொல்நவில் குறவர் மாதர்
குயிற்றிய கோலம் நீங்கி
முன்உறு தெய்வக் கோலம்
முழுதுஒருங்கு உற்றது அன்றே. ருஅ

கவலைதீர் தந்தை தானும்
கணிப்பிலாச் சுற்றத் தாரும்
செவிலியும் அன்னை தானும்
இருளையும் தெரிவை மாரும்

ருஅ. அந்தச் சமயத்தில் ஆறுமுகத்தோடு கூடிய வள்ளல், தன்பக்கத்தே இருந்த நங்கையாகிய வள்ளியை அருட் கண்ணால் பார்க்க, கொலைவல்ல குறவரின் பெண்கள் செய்த கோலம் நீங்கப் பெற்று, பழைய தெய்வ அழகு முழுதும் ஒன்றுக வந்து அடைந்தது.

உழை: பக்கம். குயிற்றிய: செய்த.

ருகூ. கவலைநீங்கிய வள்ளியின் தந்தையும் கணக்கற்ற உறவினரும் வளர்ப்புத்தாயும் அன்னையும் தோழிகளும் ஏனைய பெண் களும் குற்றம் இல்லாத, கற்பிலே மேம்

தவல்அரும் கற்பின் மிக்க
　　தம்மகள் கோலம் நோக்கி,
இவள்எமது இடத்தில் வந்தது
　　எம்பெரும் தவமே எனுர்ன். ௫௯

அந்தநல் வேலை தன்னில்
　　அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னில்
　　கன்னிகை கரத்தை நல்கி,
நம்தவம் ஆகி வந்த
　　நங்கையை நயப்பால் இன்று
தந்தனன் கொள்க என்று
　　தண்புனல் தாரை உய்த்தான். ௬௦

பட்ட தம்மகள் இப்போது பெற்ற அழகைக் கண்டு, இவள் எம்மிடத்திலே தோன்றியது நாங்கள் செய்த பெரிய தவமே எனப்பேசினுர்.

கணிப்பு: அளவு. இகுளை: தோழி. தெரிவை: பெண். தவல் குற்றம்.

௬௦. அந்தநல்ல நேரத்திலே அன்புடைய குறவர் தலைவுன வன் முருகக் கடவுள் கையிலே கன்னி வள்ளியின் கையைப் பிடித்துக் கொடுத்து, "நம் தவப்பயனுக வந்த இவளை ஆசையோடு இன்று தந்துவிட்டேன்; ஏற்றுக்கொள்க" என்று தாரைவார்த்தான்.

பாணி: கை. நயப்பு: விருப்பம்.

நற்றவம் இயற்றும் தொல்சீர்
நாரதன் அனைய காலை,
கொற்றம துடைய வேலோன்
குறிப்பினல் அங்கி யோடும்
மற்றுள கலனும் தந்து
வதுவையின் சடங்கு நாடி
அற்றம தடையா வண்ணம்
அருமறை விதியால் செய்தான். சூக

ஆவதோர் காலை தன்னில்
அரியும்நான் முகனும் வானோர்
கோவொடு பிறரும் சூழக்
குலவரை மடந்தை யோடும்
தேவர்கள் தேவன் வந்து
சேண்மிசை நின்று செவ்வேள்
பாவையை வதுவை செய்யும்
பரிசினை முழுதும் கண்டான். சூஉ

சூக நல்ல தவம் செய்யும் பழம் புகழ் படைத்த நாரத முனிவன் அது போது வெற்றி வேலனுடைய குறிப்பறிந்து மணக்கோலத்திற்குரிய உடைபோடு நகைகளையும் அணியச் செய்து தீதிலா வகையில் தேர்ந்து மறை விதித்தபடி திருமணச் சடங்கெலாம் செய்தான்.

கொற்றம் : வெற்றி. அங்கி : உடை. அற்றம் : குற்றம்.

சூஉ. அந்தச் சமயத்திலே திருமாலும் பிரமனும் வானவர்க்கரசனும் ஏனையோரும் தன்னைச் சூழ்ந்துவர மலைமகளோடு தேவர்கள் தேவனாகிய சிவபெருமான் வந்து விசும்பிலே

கண்நுதல் ஒருவன் தானும்
　　கவுரியும் கண்ணால் கண்டு
தண்அளி புரிந்து நிற்பத்
　　தண்துழாய் முடியோன் ஆதிப்
பண்ணவர் உவகை நீடிப்
　　பனிமலர் மாரி வீசி
அண்ணலை வழிபட்டு ஏத்தி
　　அஞ்சலி புரிந்திட்டு ஆர்த்தார் ௬௩

அறுமுகம் உடைய வள்ளல்
　　அன்னது நோக்கிச் சீறார்
இறையதும் உணரா வண்ணம்
　　இமயமேல் அணங்கினேடும்

நின்று கொண்டு குமரக்கடவுள் வள்ளிநாயகியை மணஞ் செய்யும் தன்மை யெல்லாவற்றையும் பார்த்தான்.

அரி : திருமால். வானோர் கோ : இந்திரன். குலவரை மடந்தை : மலையரசன் மகள் பார்வதி. சேண் : உச்சி.

௬௩. நெற்றிக்கண் பெற்ற சிவபெருமானும் தேவியும் கண்ணாலே பார்த்துக் கருணைக்கண் வைப்பத் திருமால் உள்ளிட்ட தேவரெல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால் குளிர்ந்த பூக்களை மழைபோல் பொழிந்து கந்தக் கடவுளை வணங்கி அஞ்சலி ஆரவாரம் செய்தார்கள்.

கவுரி: அம்பிகை. பண்ணவர்: தேவர். உவகை: களிப்பு. மாரி: மழை. வழிபடுதல், ஏத்துதல், அஞ்சலி புரிதல் ஒரே பொருளன.

கறைஅமர் கண்டன் தன்னைக்
　　கைதொழுது ஏனை யோர்க்கு
முறைமுறை உவகை யோடும்
　　முழுதருள் புரிந்தான் அன்றே. ௬௪

மற்றது காலை தன்னில்
　　மாதுலன் வள்ளி தன்னைக்
கொற்றவேல் உடைய நம்பி
　　வதுவைசெய் கோலம் நோக்கி
உற்றஇவ் விழிகள் தம்மால்
　　உறுபயன் ஒருங்கே இன்று
பெற்றனென் என்றான்; அன்னான்
　　உவகையார் பேசற் பாலார். ௬௫

---

௬௪. ஆறுமுக வள்ளலானவன் அவ்வானத்து நிகழ்ச்சியைப் பார்த்து அவ்வூரவர் சிறிதும் அறியாதபடி இமயவல்லி யோடு தோன்றிய நஞ்சுண்ட கண்டனைக் கும்பிட்டு ஏனையோரை முறைப்படி உள்ளக்களிப்போடு முழுக் கருணை செலுத்தினான்.

சீறூர் : குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த ஊர். இறையதும்: சிறிதும். கறை: நஞ்சு. கண்டன்: கழுத்தையுடையவன்.

௬௫. அப்பொழுது மாமனானவன், வள்ளியை வேலவன் மணம் புரியும் அழகைக் கண்டு கண்பெற்ற பயனை இன்றுதான் முழுதும் பெற்றேன் என்று கூறினன். அவன் மகிழ்ச்சிப் பெருக்கை யாரே பேசவல்லார்.

மாதுலன் : மாமன்.

மெல்இடை கொம்புஎன்று உன்ன
    விரைமலர் தழைமேற் கொண்ட
புல்லிய குறவர் மாதர்,
    பொருவில்சீர் மருகன் தானும்
வல்லியும் இன்னே போல
    வைகலும் வாழ்க என்று
சொல்இயல் ஆசி கூறித்
    தூமலர் அறுகு தூர்த்தார். சுசு

செந்தினை இடியும் தேனும்
    தீம்பல கனியும் காயும்
கந்தமும் பிறவும் ஆக
    இலைபோலி கலத்தில் இட்டுப்
பைந்தொடி அணங்கும் நீயும்
    பரிவுடன் நுகர்திர் என்ன
வெந்திறல் எயினர் கூற
    வியன்அருள் புரிந்தான் மேலோன். சுஎ

சுசு. மெல்லிய தங்கள் இடைகளைப் பூங்கொம்பு என்று கருதத்தக்கவாறு மணமலர்களோடு கூடிய குழைகளை உடுத்துக் கொண்ட புன்மையான குறப்பெண்கள் ஒப்பற்ற மாப்பிள்ளையும் பெண்ணும் இப்போதைப் போல என்றும் வாழ்வாராக என வாழ்த்தி அறுகம் புல்லைத் தூவினர்.

சுஎ. செந்தினைமாவும் தேனும் தீங்கனியும் காயும் கிழங்கும் பிறவுமான உணவுப் பொருள்களை இலையைப் போன்ற பாத்திரத்தில் படைத்து அவளும் நீயும் அன்போடு உண்ணவேண்டும் என வலிமிக்க வேடுவர் கூற அவர்கட்கு அருள் சுரந்தான் மேலோனாகிய முருகன்.

தமயந்தி—நளன் சுயம்வரம்

நள வெண்பா

வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போல்—செங்குமுதம்
வாய்அடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நல்நெஞ்சில்
தீஅடங்க ஏறினன் தேர். ௬அ

இன்உயிர்க்கு நேரே இளமுறுவல் என்கின்ற
பொன்அழகைத் தாமே புதைப்பார்போல்—மென்மலரும்

௬அ. தமயந்தியின் திருமண நாள் வந்தது. சூரியன் புறப்பட்டான். அன்று அவன் உதித்த காட்சி எப்படி இருந்தது:- தமயந்தியின் திருமணங்காண வருகின்றவனைப் போல குமுதமலர் வாய்மூடிப் போகவும் நளனுக்கும் தமயந்திக்கும் நல்ல நெஞ்சிலே மூண்டிருக்கின்ற காமத் தீ அடங்கிப்போகவும் சூரியன் தேர் ஏறினன்.

விதர்ப்பன்: தமயந்தியின் தந்தை வீமன்.

௬௯. தமயந்தியின் புன்சிரிப்பே தங்கள் இனிய உயிருக்குச் சமம் என ஆண்கள் நினைக்கின்ற பொன்னாகிய அவள் அழகைப் புதைக்கின்றவர்களைப் போல, துடியனைய இடைமடவாளாகிய அவளுக்கு மெல்லிய பூமாலையைப் போட்டார்கள்; ஒளிவீசும் நகைகளையும் பூட்டினார்கள்.

சூட்டினர்; சூட்டித் துடிசேர் இடையாளைப்
பூட்டினர் மின்இமைக்கும் பூண். ௬௯

கணிமொழிந்த நாளில் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ணல் அவற்கும்;-பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார்
மற்றெவரும் ஒவ்வார் மகிழ்ந்து. ௭௦

செந்திருவின் கொங்கையினும் தேர்வேந்தன் ஆகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வெம்தீயும்
நஞ்சும் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சும் தொடுத்தான் அவன். ௭௧

---

௭௦. நல்லநாளில் கலியாணம் செய்தார், தமயந்திக்கும் நளனுக்கும். உலகில் வேறு எவரும் ஈடில்லாத அவ் இருவரும் மகிழ்ச்சியோடு பணிப்பெண்கள் சிறிய ஏவல் செய்ய கொழுகொழுப்பான பொன் பள்ளி அறையிலே புகுந்தார்கள்.
கணி: சோதிடன்.

௭௧. திருமகளை ஒத்த தமயந்தியின் தனங்களிலும் தேர் வேந்தனாகிய நளச்சக்கிரவர்த்தியின் மார்பிலும் புகுந்து ஊடுருவிச்செல்லுமாறு தனது நீண்ட கரும்பு வில்லை வளைத்து, கொடிய நெருப்பும் நஞ்சும் தோய்ந்த அச்சத்தைத் தரும் பூ அம்பு ஐந்தையும் எய்தேவிட்டான் அவன். யார்? அந்தப் பொல்லாத மன்மதன் தான்.

ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி
இருவர் எனும்தோற்றம் இன்றிப் — பொருவெம்
கனற்குஏயும் வேலானும் காரிகையும் சேர்ந்தார்;
புனற்கே புனல்கலந்தால் போன்று. எஉ

குழைமேலும் கோமான் உயிர்மேலும் கூந்தல்
மழைமேலும் வாளோடி மீள — இழைமேலே
அல்லோடும் வேலான் அகலத் தொடும்பொருதாள்;
வல்லோடும் கொங்கை மடுத்து. எங

எஉ. போர்வல்ல கொடிய நெருப்பைப் போன்ற வேலாயுதத்தையுடைய நளனும் தமயந்தியும் நீரும் நீரும் கலந்ததைப்போல ஒருவர் உடலுக்குள்ளே ஒருவர் உட்புகுந்து இருவர் என்று சொல்லத்தக்க காட்சியில்லாமல் ஒன்றுகவே ஆகிவிட்டார்கள்.

கனற்கு ஏயும்: தீயை அனைய. புனற்கே புனல் கலத்தல்: நீரோடு நீர் ஒன்று சேரல்.

எங. தமயந்தி யானவள், காதுகளின் மீதும் காதலன் உயிரின் மீதும் கூந்தலாகிய மழையின் மீதும் தனது வாள் போன்ற கண்கள் ஒடித்திரும்ப, இருட்டை ஓட்டுகின்ற வேலாயுதத்தை உடைய நளனது ஆபரணம் அணிந்த மார்போடு வல்லைத் தோற்கடிக்கின்ற தனது தனங்களை மோதிப் போர் செய்தாள்.

குழை: காது. இழை: ஆபரணம். அல்: இருட்டு. அகலம்: மார்பு. பொருதல்: போர் செய்தல். வல்: சொற்கேட்டான் ஆடுங்காய்.

வீரன் அக லச்செருவின் மீதோடிக் குங்குமத்தின்
ஈர இளவண்டல் இட்டதே—நேர்பொருத
கார்ஆரும் மெல்ஓதிக் கன்னியவள் காதல்எனும்
ஓர்ஆறு பாய உடைந்து. எசு

கொங்கை முகம்குழையக் கூந்தல் மழைகுலையச்
செங்கயற்கண் ஓடிச் செவிதடவ—அங்கை
வளைபூசல் ஆட மடந்தையுடன் சேர்ந்தான்;
விளைபூசல் கொல்யானை வேந்து. எரு

எசு. நேராகக் கலவிப்போர் புரிந்த மேகம் போன்ற மெல்லிய கூந்தலை உடைய கன்னி தமயந்தியின் காதலாகிய ஒப்பற்ற ஆறு உடைந்து பாய, அதனால் வீரனாகிய நளனின் மார்பு என்னும் வயலின் மீது அந்நீர் பெருகி, குளிர்ந்த குங்குமச் சேற்றின் இளம் பதமாகிய வண்டல் உண்டானது.

அகலச் செறு மார்பாகிய வயல். வண்டல்: மேடு. ஓதி: கூந்தல். கன்னி: இதுகாறும் எவராலும் தீண்டப்படாதவள்.

எரு. விளைந்த போரில் எதிரிகளைக் கொல்லுகின்ற யானைகளை உடைய அரசனாகிய நளன், கொங்கைகளின் நுனிக்கண் குழைவுறவும் கூந்தலாகிய மேகம் சிதறிக் கொட்டவும் செங்கயலனைய கண்கள் சென்று செவிகளைத் தடவவும் அவள் அழகிய கைகளில் அணிந்த வளையல்கள் போர் தொடுக்க, தமயந்தியை அணைந்தான்.

கயல்: மீன். பூசல்: போர்.

தையல் தளிர்க்கரங்கள் தன்தடக்கை யாற்பற்றி
வையம் முழுதும் மகிழ்தூங்கத் — துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாள்நுதலும் தானும்
புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு. ௭௬

---

௭௬. தமயந்தியினது கொழுந்துக் கைகளை தனது பெரிய கைகளால் பிடித்து, உலக முழுதும் களிப்படைய, புனிதமான திருமணம் செய்துகொண்ட பிறகு, ஒளி மிக்க நெற்றியை உடைய அவளோடு நீண்டகாலம் இன்புற்று வாழ்ந்தான் நளன்.

மகிழ்தூங்க: களிப்படைய.

தமயந்தி — நளன் விவாகம்.

நைடதம்

மாதர்மென் நோக்கி நாணி
　　மதிமுகம் சிறிது கோட்டிக்
காதல்மீது ஊர உள்ளம்
　　களிமகிழ தூங்க நின்ற
கோதையர் மணிசெய் செம்பொற்
　　கோடிகத்து இனிதின் ஏந்தும்
தாதுலாம் அலங்கல் மாலை
　　தளிர் இயல் கரத்தில் கொண்டாள். ௭௭

இன் அரிச் சிலம்பு செம்பொற்
　　கிண்கிணி ஆர்ப்ப ஏகி
மன்னவர் மனமும் கண்ணும்
　　வண்டுஎனத் தொடர்ந்து விழக்

---

௭௭. அழகிய மென்மையான பார்வையை உடைய தமயந்தியானவள், நாணமுற்று மதியனைய முகத்தைக் கொஞ்சம் வணக்கி, ஆசை வெள்ளம் பெருக, உள்ளம் இன்பக்கடலாட, பக்கத்தில் நின்ற மாதர்கள் இனிமையோடு ஏந்திய செம்பொன்னால் செய்து இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தட்டிலே, இருந்த மகரந்தம் கலந்த மலர்மாலையை, தளிரை ஒத்த கைகளிலே எடுத்துக்கொண்டாள்.

மாதர்: அழகு; கோடிகம்: தட்டு.

கொல்நுனை வயிர ஒள்வாள்
நிடதர்கோன் குவவுத் தோள்மேல்
பொன் அரி மாலை சூட்டிப்
பூங்கழல் வணங்கி நின்றாள். எஅ

வடிமலர் நெடுங்கட் செவ்வாய்
மடவரல் இனிது சூட்டும்
தொடையல்பொற் கிரியில் வீழும்
சுடர்மணி அருவி ஏய்ப்ப
விடுகதிர் வலயத் திண்தோள்
மன்னவன் விழைவு கூர்ந்து
பிடிதழீஇ உவகை பூத்த
பெய்மதக் களிறு போன்றான். எகூ

எஅ. இனிய ஒலியை எழுப்புகின்ற பருக்கைக் கற்கள் பெய்யப்பட்ட சிலம்புகளும் செம்பொன்னாலாய சதங்கைகளும் ஒலமிட நடந்து, அங்கிருந்த அரசர்களின் நெஞ்சும் விழிகளும் வண்டுகள் போலத் தொடர்ந்து வீழ, கொல்லுகின்ற நுனியை உடைய திண்மையாள, ஒளி உடைய, வாள் தாங்கிய நிடத நாட்டு அரசனது திரண்ட தோளின் மீது, அழகிய மலர் மாலையை அணிந்து, அவனது பூப்போன்ற பாதங்களை வணங்கி நின்றாள் தமயந்தி.

வைரம்: திண்மை. நிடதர்கோன்-நளன், குவவு: திரட்சி.

எகூ. கூர்மையான குவளைப்பூப் போன்ற நீண்ட கண்களையும் சிவந்த வாயையும் உடைய தமயந்தி இனிமையாகச் சூட்டிய மாலையானது, பொன் மலையில் விழ்

பூண்உலாக் கிடந்த அல்குல்
　　பொற்பெலாம் களிகொள் வண்டின்
பாண்உலாக் கிடந்த தாரான்
　　பருகுவான் போல நோக்க
நாணம்மீது ஊரப் பைம்பொன்
　　நலத்தபூங் கொடியின் ஒல்கி
வாள்நகை உயிர்த்த செவ்வி
　　மதிமுகம் கோட்டி நின்ருள். அ௦

கின்ற ஒளியுள்ள மணிகளை வாரி வருகின்ற அருவியை ஒப்ப, பிரகாசமான தோள்வளை யணிந்த வலிய தோளை உடைய மன்னனுகிய நளன், ஆசை மிகுந்து, பெண் யானையைத் தழுவி மகிழ்ச்சி மலர்ந்த மதம் பொழியும் யானையை ஒத்தான்

வடி: கூர்மை. தொடையல்: மாலை. கிரி: மலை. ஏய்ப்ப: ஒப்ப. வலயம்: வாகுவளை. பிடி: பெண் யானை. களிறு: ஆண் யானை.

அ௦. அணிகள் கிடந்து அசைவுறும் அல்குலை உடைய தமயந்தியினது அழகு முழுதையும், களிக்கின்ற வண்டுக் கூட்டங்களின் ஒலி நீங்காத மாலையை உடைய நளன், ஒருங்கே குடித்து விடுபவன்போல் பார்க்க, வெட்கம் மேலோங்க, நலம் மிக்க தங்கக் கொடியைப் போலத் துவண்டு, ஒள்ளிய பற்கள் சிறிது தோன்றப் புன்னகை பூத்துச் சிறந்த மதிமுகத்தை வணக்கி நின்ருள் தமயந்தி.

பூண்: ஆபரணம். பாண்: இசை ஒல்கி: ஒசிந்து. செவ்வி: சிறந்த அழகு.

கள்அ ருமலர் நாற்றிஎண் காவதம்
உள்அ கன்ற ஒளிர்மணி மாடத்தின்
பிள்ளை மான்நிகர் நோக்கியைப் பெய்கழல்
வள்ள லோடு மணத்தவிசு ஏற்றினர். அக

கமலம் மீதுசெங் காந்தள் அலர்ந்தெனக்
குமரன் அங்கையில் கோல்வளை செங்கைவைத்து
இமய மாதும் இறைவனும் போலவாழ்ந்து
அமைதிர் என்ன அரும்புனல் நல்கினன். அஉ

சாந்தம் மூழ்கு தடம்புய னர்அழற்கு
ஏய்ந்த யாவும் இனிது முடித்தபின்

அக. மதுநீங்காத மலர்மாலைகளைத் தொங்கவிட்ட எட்டுக்காத தூரம் உள்ளே அகன்ற ஒளிவிடும் மணி மாளிகையில் இளையமானின் கண்ணைப்போன்ற பார்வையைப் பெற்ற தமயந்தியை வீரக்கழல் ன்ணிந்தவள்ளலாகிய நளனோடு மணத்துக்கு இயைந்த இருக்கையிலே ஏற்றினர்கள்.

அஉ. தாமரை மலர்மீது செங்காந்தள் மலர்ந்தது என்று சொல்லத்தக்கவாறு குமரருகிய நளனின் அழகிய கையின்மீது, தமயந்தி வளைச் செங்கையை வைத்துப் பார்வதியையும் பரமசிவனையும் போல, பொருந்தி வாழ்வீராக என்றுகூறி அருமையான நீரிருல் தாரைவார்த்துக் கொடுத்தான் வீமராசன்.

அங. சந்தனக்குழம்பிலே மூழ்கிய பருத்ததோள்களை உடைய நளன், பொருந்திய நெருப்பில்செய்யவேண்டிய எல்லாக்

ஆய்ந்த நான்மறை யின்வழி ஆயிழை
காந்தள் மெல்விரல் கைப்பிடித் தான்அரோ. ௮௫

பாய்இருட் பிழம்பு சீத்துப்
பகற்கதிர் உமிழும் வெய்ய
காய்எரி மணியில் செய்த
கவின்திகழ் மஞ்ச மீது
தூயமென் பஞ்சி அன்னத்
தூவிஊறு இனிய செய்யும்
ஆய்மயிர் முதல மூவைந்து
அடுக்கிய அமளி சேர்ந்தார். ௮௬

வரிமுலை யோடும் தோன்றி
வளர்தொறும் வளர்ந்து வீங்கிப்
பெருகுநாண் சுமக்கல் ஆற்றுப்
பெய்ம்மலர்க் கொம்பு போல்வாள்,

காரியங்களையும் இனிமையாக முடித்த பிறகு ஆராய்ந்த நான்மறையின் முறைப்படி தமயந்தியின் காந்தள் போன்ற விரல்களைத் தன்கையால் பற்றிக்கொண்டான்.

௮௬. பாய்கின்ற இருள் கூட்டத்தைச் செதுக்கிச் சூரிய ஒளியைக் கக்குகின்ற வெம்மையான சுடுகின்ற இரத்தினங்களால் செய்யப்பெற்ற அழகு ஒழுகும் கட்டிலின்மீது புனிதமான மெல்லிய பஞ்சினுலும் அன்னத்தின் இறகினுலும் ஆய தொட்டால் இனிப்பூட்டும் ஆராய்ந்து கொள்ளப்பட்ட மயிர் முதலிய மூவைந்து பஞ்சணை அடுக்கிய மெத்தையின் மேல் இருவரும் சேர்ந்தார்கள்.

திருமுகம் சிறிது கோட்டிக்
கயிற்புறம் அதனில் தேங்கொள்
விரிமலர்க் கூந்தல் தாழ
மின்என நுடங்கி நின்றாள். ௮௫

குருமணி வலயம் மின்னும்
குங்குமக் குவவுத் திண்தோள்
முருகுலாம் தாம மார்பன்
முறுவலின் குறிப்பு நோக்கித்
திருநலம் கனிய நின்ற
செழுங்கடை மழைக்கட் பேதை
வருமுலை ஞெமுங்கப் புல்லி
மலர்அணை மேயி னானே. ௮௬

---

௮௫. சந்தனக்கோடுஇட்ட முலைகள் உண்டான காலத்தில் தானும் வளர்ந்து பருத்துப் பெருகிய வெட்கத்தைச் சுமக்க முடியாத மலர் பெய்கின்ற கொம்பை ஒத்தவளாகிய தமயந்தி, திருமுகத்தைச் சிறிது வளைத்துப் பிடரியின்மேல் தேன் கொண்ட மலர் சூடிய விரிந்த கூந்தலைத் தாழ்த்தி, மின்னலைப் போலத் துவண்டு நின்றாள்.

வரி: கோடு. நாண்: நாணம். கயிற்புறம்: பிடரி. பெண்களுக்கு நாணமானது முலைதோன்றி அவை வளருந்தொறும் வளர்ந்து வருகின்றது என்பது கருத்து.

௮௬. நிறமான மணிகள் பதித்த தோள்வளை மின்னலிடும் குங்குமம் அணிந்த திரண்ட வலிய தோளில் மணம் பரப்பும் மாலை சூடிய மார்பனாகிய நளன், தமயந்தியின் புன்

ஆம்பல்அம் போது மானும்
அணிதிகழ் பவள வாயில்
தேம்பொதிந்து அமுதம் ஊறும்
செந்துவர்த் தேறல் மாந்திப்
பாம்புஅடும் அல்கு லாள்தன்
பணைமுலை மணிக்கண் சேப்ப
ஏம்பல்உற்று இனிது புல்லி
இளநலம் பருகி னனே. அஎ

கத்திகைக் கருமென் கூந்தல்
கயிற்புறத்து அவிழ்ந்து விழ

சிரிப்பின் குறிப்பை அறிந்து, திருமகளைப் போல் அழகு ஒழுக நின்ற செழுமையான குளிர்ந்த கடைக் கண்களை உடைய அப்பேதையின் வளர்கின்ற தனங்களை அழுந்தத் தழுவி மலர் மெத்தையிலே பொருந்தினன்.

குரு: நிறம். முருகு: மணம். தாமம்: மாலை. ஞெமுங்க: அழுந்த.

அஎ. அல்லிப் பூவை ஒத்த அழகு விளங்கும் பவளம் போன்ற இதழினது தேனைக் குடித்துப் பாம்பின் படத்தை ஒத்த அல்குலை உடைய தமயந்தியினது பருத்த முலைகளின் கரிய கண்கள் சிவப்பேற இன்புற்று இனிமையாகத் தழுவி அவள் இள நலத்தைக் குடித்தான் நளன்.

ஆம்பல்: செவ்வல்லி. மானும்: ஒத்த, தேம்; மணம். தேறல்: தேன். ஏம்பல்: இன்பம்.

முத்துஅரிச் சிலம்பு பைம்பொற்
கிண்கிணி முரன்று பாடத்
தத்துஅரி நெடுங்கண் சேப்பத்
தடமுலை தாங்கல் ஆற்ருது
எய்த்தநுண் மருங்குல் தேம்ப
ஏந்தலோடு ஆடி ளுளே. அஅ

களிக்கயல் பொருது நீண்டு
கதுப்பினை அளக்கும் வேற்கண்
துளிப்புயல் மின்னின் அன்னுள்
தொண்டைவாய் அமுதம் மாந்தித்

அஅ. மாலையை அணிந்த கரிய மெல்லிய குழலானது பிடரியிலே அவிழ்ந்து தொங்க, முத்துக்களாகிய கற்களை உள்ளடக்கிய சிலம்புகளும் பசிய பொற்சதங்கைகளும் ஒலித்துப் பாட, தாவுகின்ற அரிபடர்ந்த நீண்டகண்கள் சிவப்ப, பெரிய கொங்கைகளைத் தாங்க மாட்டாமல் இளைத்துப்போன நுண்ணிய இடைவருந்த நளனேடு சேர்ந்தாள் தமயந்தி.

கத்திகை: மாலை. கயில்: பிடரி. தேம்ப: வருந்த. ஏந்தல்: நளன்.

அகூ. களிப்பை உடைய கயல்மீனேடு போர்செய்து நீண்டு கூந்லைத அளக்கின்ற வேல்போன்ற கண்ணை உடைய நீர்த்துளியை நல்கும் மேகத்தில் தோன்றிய மின்னை ஒத்தவளாகிய தமயந்தியினது கொவ்வைக்கனி போன்ற வாயில் ஊறும் அமிழ்தத்தைக் குடித்து அவ்வமிழ்தம் உண்டமையினுலே தழைத்து எழுகின்ற

தளிர்த்துஎழும் உவகை பொங்கத்
தண்நறும் சாந்த மார்பன்,
அளப்பரும் களிகொள் காமக்
கடல்அகத்து அழுந்தினனே. அகூ

புலவியில் துயின்றாள் தீண்டின்
முனிந்திடும் பூவை என்று
மலர்அணைப் புறத்துத் தானும்
அயிறல்போல் கிடப்ப, வாய்ந்த
கலவியின் வேட்கை தூண்டக்
கனவினில் வெருவி னாள்போல்
முலைமுகடு அழுந்த வேந்தன்
முழவுத்தோள் புல்லி அளே. கூ0

மகிழ்ச்சியானது பொங்க, குளிர்ந்த நல்ல சந்தனத்தை அணிந்த மார்பை உடையவனாகிய நளன், கணக்கிட முடியாத களிப்பைக்கொண்ட காமக் கடலினுள் மூழ்கி விட்டான்.

கதுப்பு: கூந்தல். புயல்: மேகம். தொண்டை: கொவ்வைக்கனி.

கூ0. ஊடலினாலே உறங்குகின்றாள், தொட்டால்கோபிப்பாள் தமயந்தி என்று மலரணையிலே நளனானவன் தானும் தூங்குவது போல அவள் பக்கத்தே கிடப்ப, பொருந்திய சேர்க்கையிலே ஆசையானது தூண்ட, கனாக்கண்டு அதனாலே பயந்தவளைப்போல முலைகளின் உச்சி அழுந்துமாறு நளனுடைய மத்தளம் போன்ற தோள்களைத் தழுவினாள் தமயந்தி
புலவி : பிணக்கு. முழவு : மத்தளம்.

மீனுட்சி—சுந்தரேசர் திருமணம்
திருவிளையாடற் புராணம்

அல்பக இமைக்கும் செம்பொன்
அரதன பீடத்து உம்பர்ப்
பொற்புஅக லாத காட்சிப்
புனிதனேடு இருந்த நங்கை
எல்பகல் வலங்கொண்டு ஏகும்
எரிகதிர் வரையின் உச்சிக்
கற்பக மருங்கில் பூத்த
காமரு வல்லி ஒத்தாள். ௬௧

பண்ணும்இன் இசையும் நீரும்
தண்மையும் பாலும் பாலின்

---

௬௧. மீனுட்சி அம்மை சுந்தரேசரோடு மணக்கோலந்தாங்கி மணத் தவிசிலே வீற்றிருந்தாள். அக்காட்சி பின்வருமாறு சித்திரிக்கப்படுகிறது. இருளைப் பிளந்து ஒளிவிடுகின்ற செம்பொன்னுற் செய்து மணிகள் அழுத்திய பலகையின் மீன் அழகு நீங்காத காட்சியை உடைய புனிதனுகிய மணமகனேடு வீற்றிருந்த நங்கையானவள் இரவு பகலாகச் சூரியன் வலம் வருகின்ற மலையின் உச்சியிலே கற்பக மரத்திலே பூத்த அழகிய கொடியை ஒத்தாள்.

அல் : இருட்டு. பக: பிளக்க. பொற்பு: அழகு.

௬௨. சிவபெருமானும் உலகத்தை எல்லாம்பெற்ற அம்பிகையும் வீற்றிருந்த திருக்கோலம். பாட்டும் இனிய இசையும் நீரும்

நண்ணும்இன் சுவையும் பூவும்
நாற்றமும் மணியும் அம்கேழ்
வண்ணமும் வேறு வேறு
வடிவுகொண்டு இருந்தால் ஒத்தது
அண்ணலும் உலகம் ஈன்ற
அம்மையும் இருந்தது அம்மா. கூஉ

அம்மையோடு அப்பன் என்ன
அலர்மணம் போல நீங்கார்
தம்அருள் விளையாட் டாலே
ஆற்றநாள் தமியர் போல
நம்மனோர் காணத் தோன்றி
நன்மணம் புணர ஞாலம்
மும்மையும் உய்ந்த என்னுத்
தத்தமின் மொழியல் உற்றார். கூங

அதன் குளிர்ச்சியும் பாலும் அப்பாலிற்பொருந்திய இனிய சுவையும் மலரும் அம்மலருள் அடங்கிய மணமும் மணியும் அம்மணியுள் திகழும் அழகிய நிறமும் வேறு வேறு உருவு பெற்று இருந்ததை ஒத்தன.

கூங. அம்மையும் அப்பனும்போல மலரும் மணமும்போலப் பிரியாது இருந்த இவ்விருவரும் தங்கள் அருள் திருவிளையாடலால் நிறைந்த நாள் தனித்தனியாக நம்மவரெல்லாம் அறியுமாறு தோன்றி, நல்ல மணம்புரிந்தமையால் மூன்று உலகங்களும் உய்ந்தன எனத் தத்தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.

சுற்றுநான் மறைகள் ஆர்ப்பத்
தூரியம் சங்கம் ஏங்கக்
கற்றநான் முகத்தோன் வேள்விச்
சடங்குநூல் கரைந்த ஆற்றால்
முற்ற,மங் கலநாண் சாத்தி
முழுதுலகு ஈன்றாள் செங்கை
பற்றினன் பற்றி லார்க்கே
விடுஅருள் பரம யோகி. கூச

பின்புதன் பன்னி யோடு
பிறைமுடிப் பெருமான் கையில்
நன்பொரி வாங்கிச் செந்தீ
நாமடுத்து எனைத்தும் ஆன

கூச. எங்கும் நான்மறைகள் முழங்க இசைக் கருவிகளும் சங்கமும் ஒலிப்ப, படித்தறிந்த பிரமதேவன் மணச் சடங்குகளை மண நூலில் சொல்லியபடி செய்துமுடிக்க, மங்கல அணியைப் பூட்டி எல்லா உலகங்களையும் ஈன்ற அம்பிகையின் செங்கையைப், பற்றுவிட்டவர் கட்கு வீடு தந்தருளும் பரமயோகியாகிய கடவுள் பற்றினான்.

தூரியம்: வாத்தியம். கரைந்த: சொல்லிய. முற்ற: செய்துமுடிக்க.

கூரு. பிறகு தன்பத்தினியோடு சந்திரனைச் சூடிய சிவ பெருமான் கையிலே நல்ல பொரியை வாங்கித் தீயில் போட்டு எல்லா உலகமும் ஆன தனது தன்மையை அறிந்த மறைவல்லார்க்கு மனத்திலே இன்பம் பொங்க,

தன்படிவு உணர்ந்த வேத
முனிவர்க்குந் தக்க தானம்
இன்புஅகம் ததும்ப நல்கி
எரிவலம் முறையால் வந்து, கூரு

மங்கலம் புனைந்த செம்பொன்
அம்மிமேல் மணுட்டி பாத
பங்கய மலரைக் கையால்
பரிபுரம் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவால் ஏற்றிப்
புண்ணிய வசிட்டன் தேவி
எங்கெனச் செங்கை கூப்பி
எதிர்வர அருட்கண் சாத்தி, கூசா

விதிவழி வழாது வேள்வி
வினைஎலாம் நிரம்ப இங்ஙன்
அதிர்கடல் உலகம் தேற
ஆற்றிநான் மறைகள் ஆர்ப்பக்

தகுந்த தானம் கொடுத்து முறைப்படி தீயை வலம் செய்து,

கூசா. அலங்கரிக்கப்பட்ட தங்க அம்மியின் மீது மணப் பெண்ணின் திருவடியாகிய தாமரைப் பூவைத் தனது கையினுல் சிலம்பு அலறப்பிடித்து, புங்கவனுகிய சிவ பெருமான் மரபுப்படி மிதிக்கவைத்துப் புண்ணிய வசிட்ட முனிவனின் தேவியாகிய அருந்ததி எங்கே எனக்கேட்க, அவள் கைகுவித்து எதிர்வர அருட் பார்வை பார்த்து,

கதிர்மணி நகையார் வாழ்த்தக்
காமனைக் காய்ந்த நம்பி
மதிநுதல் மங்கை யோடு
மணஅறை தன்னில் புக்கான். கூஎ

மனிதரும் இமையாது ஐயன்
மங்கல வனப்பு நோக்கிப்
புனிதவா னவரை ஒத்தார்;
அவர்க்கது புகழோ? எந்தை
கனிதரு கருணை நாட்டம்
பெற்றவர் கடவு ளோரால்
பனிதரு மலர்இட்டு ஏத்தி
வழிபடற் பாலர் அன்றோ? கூஅ

கூஎ. விதிமுறை தவருமல் வேள்விச் சடங்கெலாம் நிறைய உலகம் தெளியுமாறுசெய்து நான் மறைகள் முழங்க, நங்கைமார் வாழ்த்தெடுப்ப, நமனை வீழ்த்திய நம்பியான வன் மதி நுதல் மங்கையாகிய மீனுட்சியோடு மணவறையிலே புகுந்தான்.

மேலே உள்ள மூன்று பாடலும் ஒரே தொடர்.

கூஅ மக்களும் கண்கொட்டாமல் ஐயனது திருமணக் கோலத்தைக்கண்டு புனிதமான தேவர்களைப்போல் ஆனர்கள். அப்படி ஆனதில் அவர்கட்கு என்னபுகழ்? எம்பிரானின் பழுத்த கருணைக் கண்பார்வை அடைந்தவர் அவ்வானவரால் பனி மலர்தூவிப் பாராட்டி வணங்குதற்கு உரியாரல்லரோ?

மணஅறைத் தவிசின் நீங்கி
மன்றல்மண் டபத்திற் போந்து
கணமணிச் சேக்கை மேவிக்
கருநெடுங் கண்ணன் வாணி
துணைவனே முதல்வா னோர்க்கும்
சூழ்கணத் தொகைக்கும் என்றும்
தணவறு செல்வம் தந்தோன்
சாறுசால் சிறப்பு நல்கி, ௯௯

ஏட்டுவாய் முளரி யான்மால்
ஏனைவா னவரும் தத்தம்
நாட்டுவாழ் பதியிற் செல்ல
நல்விடை கொடுத்து, வேந்தர்க்கு
ஆட்டுவான் ஆடிக் காட்டும்
தன்மைபோல் அரசு செய்து
காட்டுவான் ஆகி ஐயன்
திருஉளக் கருணை பூத்தான். ௧௦௦

---

௯௯. மண அறையின் இருக்கையைவிட்டு எழுந்து மண மண்டபத்திலே பொருந்திக் கூட்டமாகிய மணிகள் அழுத்திய வேறொரு ஆசனத்திலே அமர்ந்து பெரிய நீண்ட கண்ணை உடையவனாகிய திருமால் வாணிதுணைவனாகிய பிரமன் முதலிய தேவர்கட்கும் அங்குக் கூடிய பூத கணங்கட்கும் எப்பொழுதுமே குறைவற்ற செல்வத்தை ஈந்தோனாகிய சிவபெருமான் மிக்க சிறப்புச் செய்து,

௧௦௦. இதழமைந்த தாமரையில் வாழும் பிரமன் திருமால் உள்ளிட்ட தேவரெல்லாம் தத்தம் நாட்டிலே அவரவர் வாழ்

அதிர்விடைக் கொடிஅங் கயற்கொடி ஆக
அராக்கலன் பொற்கலன் ஆகப்
பொதிஅவிழ் கடுக்கை வேம்புஅலர் ஆகப்
புலிஅதள் பொலந்துகில் ஆக
மதிமுடி வைர மணிமுடி ஆக
மறைகிடந்து அலம்புமா மதுரைப்
பதிஉறை சோம சுந்தரக் கடவுள்
பாண்டியன் ஆகிவிற் றிருந்தான். கoக

கின்ற ஊர்கட்குப்போக நல்ல விடைகொடுத்து, இவ வுலகிலுள்ள மன்னர்கட்கு ஆட்டுகின்றவன் ஆடிக் காட்டும் முறைபோல அரசாட்சிசெய்து காட்டுவானாகி சுந்தரக் கடவுள் திருவுளக் கருணை செய்தான்.

மேற்குறித்த இரண்டு பாடலும் ஒரே தொடர்.

ஏடு: இதழ். முளரி: தாமரை.

கoக. சிவனுக்குரிய விடைக்கொடி பாண்டியனுக்குரிய மீனக் கொடியாக மாற, முன்னோனுக்குரிய பாம்பு அணி பின்னோனுக்குரிய பொன்னணியாக மாற, கடவுளுக்குரிய கொன்றை மாலை மன்னனுக்குரிய வேப்பமாலையாக மாற, அவனணிந்த புலித்தோல் இவனணியும் பட்டுத் துகிலாக மாற, அப்பெருமான் முடிந்த திங்கள் முடி தென்னவன் பூணும் வைர மகுடமாக மாற, மறைகள் கிடந்து முழங்குகின்ற மாமதுரைப் பதியிலே உறைகின்ற சோமசுந்தரக் கடவுள் பாண்டிய மன்னனாகி அரசு புரிந்தான்.

திருமணப்பாட்டு முற்றும்.

சிலப்பதிகாரம்

மங்கல வாழ்த்துப் பாடலின் கருத்து

திங்களை வணங்குவேம்; மதியை வழுத்துவேம். ஏன்? அந்தச் சந்திரனனவன், தாது விரிகின்ற மாலை யணிந்த சோழ மன்னனுடைய குளிர்ந்த பூச் சக்கரக் குடைபோல இப்பரந்த உலகைக் காப்பதால்.

சூரியனைத் தொழுவேம்; பரிதியைப் பரவுவேம் எதற்காக? காவிரிநாடனாகிய சோழனின் ஆணைச் சக்கரம் போலப் பொன் சிகரம் கொண்ட மேரு மலையைச் சுற்றி வருதலால்.

சிறந்த மழையை வழிபடுவேம்; உயர்ந்த புயலைக் கும்பிடுவேம். எதன் பொருட்டு? அச்சம் தரும் கடல் சூழ்ந்த உலகத்திற்கு அச் சோழனின் கருணையைப் போல மேலே நின்று பொழிவதால்.

அழகிய புகார் நகரத்தைப் போற்றுவேம்; காவிரிப் பூம்பட்டினத்தைக் கைகுவிப்பேம். எக்காரணம் பற்றி? நிறைந்த நீர் வேலி கொண்ட உலகிற்கு அந்தச் சோழன் தன் குலத்தோடு அந்த நகரத்திலே சிறந்து பெருகி வாழ்வதால்.

ஆதலால், பொதிகை மலையாயினும், இமயமலை யாயினும், ஊரை விட்டு வேற்றூர் குடிபுக எழுந்து அறியாத பழைய குடிமக்கள் நெருங்கிய தனிச் சிறப் புடைய புகார் நகரமேயாயினும், இவை அசையாமல் நிலைபெற்றிருக்கும் என்று சொல்லுவதைத் தவிர, இவற் றிற்கு முடிவு உண்டு என்று சொல்ல மாட்டார் முற்றும் உணர்ந்தோர். எதனால்? இவ் இடங்களில் பெரியோர் தங்கியிருப்பதனால்.

ஆகையினால், மேல் உலகத்தோடும் கீழ் உலகத்தோடும் ஒத்த நீண்ட இன்பமும் புகழும் நிலைத்த புகார் நகரத்திலே வான்முகிலைப் போல வழங்கும் கையையுடைய மாநாய்கன் செட்டியாருடைய குலக் கொழுந்து சிறந்த பொற்கொடியனையாள், பன்னிரண்டு ஆண்டினள்.

அவள்தான், திருமகளை ஒத்த வனப்பும் அருந்ததியைப் போன்ற கற்பும் உடையாள் எனப் பெண்களெல்லாம் தொழுது பாராட்டப் பெற்றவளும் பெருங் குணங்களால் காதலிக்கப் பெற்றவளும் ஆகிய கண்ணகி என்பாள்.

அந்தப் புகார் நகரத்தாருள் ஒருவன் இருந்தான். உலகாளும் மன்னனை முதலாக வைத்து எண்ணும் ஒப்பற்ற குடி மக்களிலே உயர்ந்து வளர்ந்த செல்வத்தையுடையவன்; தனக்கு வளர்ந்துவரும் பொருளைப் பிறர்பால் நிரப்பும் மாசாத்துவான் செட்டியார் என்ற பெருஞ் செல்வன். அவனுக்கு ஒரு மகன், பதினாறு ஆண்டினன்.

இவன் மண் சிறுகப் பெருகிய புகழாளன்; திங்கள் வதனச் செல்வியராகிய இசையைப் பழிக்கும் பேச்சினைப் பெற்ற பெண்கள் குழுவிலே இவன் குமரக் கடவுளே என்று அன்போடு புகழ்ந்து பாராட்டி ஏத்தப் படும் உரிமை உடையான். இவனே கோவலன் என்பான்.

கண்ணகி-கோவலன் என்ற இவ் இருவரையும் மணக் கோலத்திற் கண்டு களிப்படைய எண்ணினர் இருவருடைய பெற்றோரும். அதுபோது, யானைக் கழுத்தில் அலங்காரப் பெண்களை அமர்த்தி, சிறந்த புகார் நகர் முழுதும் கோவலன்-கண்ணகி திருமணச் செய்தியை அறிவித்தனர்.

௮௦ மங்கல வாழ்த்துப் பாடலின் கருத்து

அதுகாலை, முரசவாத்தியம் முழங்கின; மத்தளம் அதிர்ந்தன; முத்துக்கள் கட்டிய வெண் குடைகள் அரசர்கள் பவனியென்று சொல்லும்படி புறப்பட்டன; ஊரெல்லாம் மங்கல அணி எழுந்தது.

வைர மணிகள் பதித்த தூண்கள் நிரைத்து, மாலைகள் தொங்கவிடப் பெற்று, நீலப்பட்டாலான மேற்கட்டி கட்டி முத்துக்கள் சரம் சரமாகத் தொங்கும் அலங்காரக் கொட்டகையிலே, சந்திரன் உரோகிணியை அணையும் நல்ல நாளிலே, மறைகளைக் கற்றறிந்த பார்ப்பான் மறைச் சடங்கியற்ற, அருந்ததியை ஒத்த கண்ணகியைக் கோவலன் கைப்பிடித்துத் தீயை வலம் வருவதைக் காண்கின்றவர் கண்கள் செய்த பாக்கியந் தான் என்னே!

திருமண விழாவிலே நங்கையர் பலர், வாசனைப் பொருள்களையும் மலர்களையும் மாலைகளையும் சந்தனத்தையும் தூபங்களையும் தீபங்களையும் சுண்ணப் பொடியையும் அணிகளையும் முளைக் குடங்களையும் ஆங்காங்கு தூக்கித் திரிகின்றனர். அன்னார் விளங்கும் மேனியராகவும் ஒசிந்த நோக்கினராகவும் முகிழ்த்த மூரலராகவும் ஏந்து இள முலையினராகவும் காட்சி அளிக்கின்றார். பொற்கொடி அனைய அம் மெல்லியலார் மகிழ்ச்சிப் பெருக்கால் பேசியும் பாடியும் வருகின்றார்.

அம்மாதர்கள் இப்பக்கத்திலே மட்டுமன்றி, இமய மலைக்கும் அப்பால் சென்று அவனுடைய புலிக்கொடி விளங்க அரசு புரிந்து ஒப்பற்ற ஆழியைச் செலுத்தும் சோழனைப்போல உயர்ந்து, ' காதலனைப் பிரியாமல் கட்டிய கை விலகாமல் எல்லா நலனும் பெற்று வாழ்க'' என வாழ்த்தி, சில பூக்களைச் சொரிந்து இவ் உலக அருந்ததியாகிய கண்ணகியை நல்ல மங்களமான அமளியிலே ஏற்றினர்.

பாட்டு முதற் குறிப்பு

யுனைட்டெட் பிரிண்டர்ஸ், காரைக்குடி.